JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
# PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 | இதழ்: 07 | பக்கங்கள்: 08 | திகதி 29-04-2012 | விலை: 15.00

## பொதுநிலையினர் கழகம் – யாழ் ஆயர் சந்திப்பு

யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் செயற்குழு உறுபபினர்கள் கழகத்தின் இயக்குநர் தந்தை ம.வி.இ.இரவிசசந்திரன் அடிகளுடன் இணைந்து அண்மையில் யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களை



ஆயர் இல்லத்தில் சந்தித்து உரையாடினர்.

இச் சந்திப்பின் போது பொதுவான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. பங்குத் தந்தையர்கள் தமது பங்கில் உள்ள குடும்பங்களை தரிசிப்பது தற்போது குறைவடைந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றும் மக்கள் மத்தியில் காணப்படும் ஆன்மீக வறட்சியை போக்க இயலுமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நற்கருணைப் பணியாளர் விடயம் மறைமாவட்ட ரீதியாக பொருத்தமானவர்களை தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுத்து நியமிப்பதன் மூலம் பொதுநிலையினரை ஊக்குவிக்க முடியும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் இந்துப் பாடசாலைகளிலும், பிறசமய பாடசாலைகளிலும் கத்தோலிக்க மாணவரின் சமயக்கல்வி விடயத்தில் அக்கறை கொண்டு தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வன்னிப் பகுதியில் மீள்குடியேற்றம் இடம் பெற்ற பகுதிகளில் முடிவுறாத நிலையில் உள்ள ஆலயங்களின் கட்டுமான பணிகள், வன்னிப்பகுதி மக்களின் ஆன்மீக செயற்பாடுகள், மீள்குடியேற்றம் இடம்பெறாத பகுதிகளில் சொத்துக்கள் சூறையாடப்படல் போன்ற விடயங்கள் கிளி - முல்லை மறைக்கோட்ட பொதுநிலையினர் கழக உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. பாதுகாவலன் பத்திரிகையின் பக்கங்களை அதிகரித்து அங்கு ஆன்மீகம் சம்மந்தமான ஆக்கங்களை உள்ளடக்கி வெளியிடுமாறு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

மேலும் எமது தமிழ் மக்களின் சிறந்த ஆன்மீக தலைவராக இருக்கும் ஆயர் அவர்கள் இயலுமான வரை தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பது பாராட்டத்தக்கது என்றும் தொடர்ந்தும்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## ஆயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்களையும் இளையோர்களையும் ஒன்றுதிரட்டிய புனித இயூஜினின் விண்ணகப்பிறப்பின் 150வது யூபிலி ஆண்டு

அமலமரித்தியாகிகளின் சபை நிறுவுனர் புனித இயூஜின் டி மசனட் உலகின் பல பாகங்களிலும் பரந்து விரிந்து பணியாற்றும் அமதிகளின் இதயத்துடிப்பாக விளங்குபவர். அவரது விண்ணகப் பிறப்பின் 150வது யூபிலி ஆண்டு உலகெங்கும் மாபெரும் அளவில் கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் இலங்கைத் திருச்சபையின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் முதுகெலும்பாக இருந்த புனித இயூஜினின் யூபிலி ஆண்டை இலங்கையின் வட மாநில அமதிகள் வெகு சிறபபாக நினைவு கூர்ந்தனர். கடந்த வருடம் ஆரமபிக்கபபட்ட இந்த யூபிலி ஆண்டை 19-04-2012 வியாழக் கிழமை வடமாநில அமதிகள் அனைவரும் மிகப் பெரிய சிறுவர்-இளையோர் விழா மூலமாக நிறைவு



செய்து கொண்டாடினர். நாள் முழுவதும் நடந்த இப்பெருநிகழ்வில் 1400 இற்கு மேற்பட்ட சிறுவர்களும், 100 இற்கு மேற்பட்ட ஊக்குவிப்பாளர்களும், வடமாநில அமதிகள் மற்றும் குருமட மாணவர்கள் அனைவரும் புனித (தொடர்ச்சி 4ம் பக்கம்)

## யாழ் நூலகத்திற்கு மூவாயிரத்திற்கு மேற்பட்ட நூல்களை அன்பளிப்பு செய்தார் அருள் முனைவர் மேர்வின் பெர்னாண்டோ அடிகள்

### "எமது இனம் புரிந்த கொடூரத்திற்கு பிரயாச்சித்தமாகவே எனது புத்தக செல்வங்களை வழங்கினேன்". மேர்வின் பெர்னாண்டோ அடிகள்

கொழும்பு மறை மாவட்டத்தின் மூத்த குருவானவரும், பிலியந்தலை சுபோதி நிறுவன ஸ்தாபகரும், ஓர் விஞ்ஞான அறிஞருமாகிய அருள் முனைவர் மேர்வின் பெர்னாண்டோ அடிகள் கடந்த சித்திரை 21ம் திகதி தமக்கு சொந்தமான மூவாயிரத்திற்கும் அதிகமான புத்தகங்கள் அடங்கிய 75ற்கும் மேற்பட்ட புத்தகப்பொதிகளை யாழ் நூலகத்திற்கு அன்பளிப்பு செய்தார்.



இந்நிகழ்வில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ் பிரதம நூலகர் திருமதி இமெல்டா, உட்பட பல கல்விமான்களும், வாசக நேயர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ் ஆயர் அவர்கள் அருள் முனைவர் மேர்வின் பெர்ணாண்டோ அடிகளாரை அறிமுகம் செயததைத் தொடர்ந்து மேர்வின் அடிகள் உரையாற்றுகையில் "நான் சிறுவயது முதல் புத்தகங்களை நேசித்து வாசித்து கல்விக் கடலில் மூழ்கியிருக்கின்றேன். பல புத்தகங்களை எழுதியும் உள்ளேன். எனது நிறுவனத்தில் எனக்கு சொந்தமான எல்லா நூல்களையும் வடக்கில் பிரசித்தி பெற்ற இந் நூல்நிலையத்திற்கு வழங்குவது எனக்கு ஆத்ம திருப்தியைக் கொடுக்கின்றது. 1981 மே மாதம் 31ம் திகதி எமது இனம் செய்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகளுக்கு பிரயாச்சித்தம் செய்வதாக எனது நூல் அன்பளிப்பு அமைகின்றது" என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி அம்மையார் வடக்கில் பழையன களைந்து புதியன

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## "முரண்பாடுகளைக் கையாளுதல்" - கருத்தமர்வு

கிளிமுல்லை மறைக் கோட்ட கரிதாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஒருங்கிணைந்த மானிட முன்னேற்றத் திட்டத்தின் ஏறபாட்டில் கடந்த 18/04/2012 அன்று மேற்படி செயலமர்வு கியூடெக்கின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிமுல்லை மாவட்டங்களின் இடங்களில இயங்கும் பெண்களுக்கான ஊக்குவிப்புக் குழுக்களில் வெவ்வேறு பொறுப்புக்களை வகிப்போரும் நிறுவனத்தின் தொண்டர்களும் இச்செயலமர்வில் கலந்து கொண்டனர். முழு



நாளாக இடம் பெற்ற இந்நிகழ்வை அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன், யூடா சதீஷ் குமார் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

தனிநபர்களுக்கிடையிலும் குடும்பங்களுக்கிடையிலும் சமூகங்கள் மத்தியிலும் ஏற்படும் முரண்பாடுகளைக் கையாளுவதற்கான நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## கிளரீசியன் சபை இளம் குருக்களுக்கான தொடர் உருவாக்கம்

கிளரீசியன் சபையில் பணிபுரியும் இளம் குருக்களுக்கான தொடர் உருவாக்க நிகழ்வு ஒன்று 20/09/2012 அன்று சக்கோட்டைப்பங்கில் நடைபெற்றது. குருவாகி ஐந்து வருடத்திற்குட்பட்ட குருக்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு தடவை என நடாத்தப்படும் இத்தொடர் நிகழ்வில் இம்முறை அருட்பணி ம.வி.இ. இரவிச்சந்திரன் அடிகளார் வளவாளராக கலந்து கொண்டு திசை காட்டல் உரையை வழங்கினார். தொடர்ந்து சபையின் புதிய முதல்வர் அருட்பணி. ஜோய் அவர்கள் தலைமையில் அனுபவப்பகிர்வும் இடம் பெற்றது. இதற்கான ஒழுங்குகளை பங்குத்தந்தை அருட்பணி. அகஸ்ரின் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

## ஏமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# கொண்டாட்டமாகும் திண்டாட்டம்

உலக வரலாற்றுப் பாதையில் நிகழ்த்தப்படுகின்ற அல்லது நினைவுகூரப்படுகின்ற தினங்களில் தொழிலாளர் தினம் என அழைக்கப்படுகின்ற மே தினமும் ஒன்றாகும். தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் சமூக சாதனைகளை எடுத்துக்காட்டுகின்ற நிகழ்வாக மே முதலாம் நாள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் தினத்தின் கொண்டாட்டம் அதன் மூலங்களை எட்டு மணி நேர நாள் இயக்கத்தில் கொண்டிருக்கின்றது. இது எட்டு மணி நேர வேலை; எட்டு மணி நேர பொழுதுபோக்கு; மற்றும் எட்டு மணி நேர ஓய்வு ஆகியவற்றை வாதிட்டது.

தொழிலாளர் தினமானது விடுமுறை தினமாக சர்வதேச ரீதியிலும் இலங்கையிலும் பிரகடனப்படுத்தப்பட்டு அணிவகுப்புகள், ஊர்திப்பவனிகள், அரசியல் கட்சிக் கூட்டங்கள், தொழிலாளர் சம்பந்தமான நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல கொண்டாட்டங்களை தற்காலத்தில் கொண்டிருக்கின்றன. இவற்றின் பின்னணியில் தொழிலாளர் தினத்தின் உண்மையான அர்த்தம் மறக்கப்பட்டு விடுகின்றது.

பொருளாதாரமும் தொழிலாளர்களும் ஒரு நாட்டின் சமூகத்தின் முதுகெலும்பானவர்கள். பொருளாதார நிலையில் அல்லது தொழிலாளர் களின் வாழ்வியலில் இடர்கள் ஏற்படும் போது ஒட்டுமொத்தமாக ஒரு நாடே பின்னடைவை சந்திக்கும். ஆனால் இன்றைய உலக அரசியலாளர் தொழிலாளர்களின் மேன்மையை அவர் தம் முக்கியத்துவத்தை உணர மறந்துவிடுகின்றனர். இதனால் எமது நாடு உட்பட சர்வதேச அரங்கில் தொழிலாளர் மிக மோசமான உடல் உள தாக்கங்களிற்கு ஆளாக்கப்பட்டு உழைத்து வருவதைக் காண முடிகின்றது. எட்டு மணி நேர ஓய்வு, எட்டு மணி நேர உழைப்பு, எட்டு மணி நேர பொழுது போக்கு என்பனவெல்லாம் தொழிலாளர்களுக்கு இன்று எட்டாக் கனியாகி விட்டது. அது மட்டுமன்று தொழிலாளர்களைப் பாதிக்கும் மனிதநேயமற்ற பாரிய பிரச்சனையாக அவர் தம் ஊதியப் பிரச்சனை அமைந்துள்ளது. அதாவது உழைப்பிற்கேற்ற நீதியான ஊதியம் இன்று தொழிலாளர்களிற்கு வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு கசக்கிப் பிழியப்பட்டு அவர்களது குரல் வளைகள் நசுக்கப்படுகின்றன. தொழிலாளர்களது கண்ணீரிலும், செந்நீரிலும் விளைந்த விளைவுகளைத் தான் நாம் ஒவ்வொருவரும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்; சுவைத்துக்கொண்டி ருக்கின்றோம் என்பதனை நிலப்பிரபுக்களோ, முதலாளிவர்க்கத்தினரோ, அரசியல் வாதி களோ, சிறிதேனும் நினைப்பதாகவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இன்று சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டு அவர்களும் தொழிலாளர் களாக்கப்பட்டுள்ளனர். பிஞ்சுக் கரங்கள் பளுக்கள் சுமக்குன்றன. தொட்டிலில் தவழவேண்டியவர்கள் வேலைச் சுமையால் நடுத்தெருவில் தவறிவிழுகின்றனர். சிறுவர் உரிமைகளைப் பற்றி எழுதப்பட்ட சாசனங்கள் எல்லாம் அலங்கார அலுமாரிகளில் அடுக்கி வைக்கப் பட்டுள்ளன.

தொழிலாளரின் மேன்மை இன்று எவராலும் உணரப்படுவதில்லை. அதுமட்டுமன்று தொழிலாளர்கள் கூட தம் தொழிலின் புனிதத் தன்மையை உணர்வதில்லை. "செய்யுந் தொழிலே தெய்வம்" என்ற அமுதவாக்கு இன்று அல்லலில் அழுந்துகின்றது. ஒவ்வொருவரும் தம் தொழில்களின் புனிதத்தையும் மேன்மையையும் உணர்ந்து தாம் செய்வது மக்கள் பணி ஊடான இறைபணி என்பதை உணர வேண்டும். எல்லாத் தொழில்களும் இறைவனால் படைக்கப்பட்டவை ஆகும். தொழில் ரீதியாக வகுத்துக் கொண்ட வரம்புகள் மனிதனைக் கூறுபோடும் வரம்புகளாக எல்லை மீறி நிற்கும் தொல்லைக்குள்ளும் நாம் இன்று சிக்கித் தவிக்கின்றோம்.

தொழிலாளர் தினத்தில் இவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து சீர்படுத்தி நிற்பதற்குப் பதில், தொழிலாளர் தினமும் எமது சமூகத்தில் அரங்கேறும் அர்த்தமற்ற சடங்குகளுள் ஒன்றாக சங்கமித்து நிற்கின்றமையே இன்றைய யதார்த்தமாகும். பொருளாதார சுமைகளும், பொருட்களின் விலைவாசி உயர்வும், உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காமையும் விஷம் போல் எகிறி ஏறி வரும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் திண்டாட்டங்களை கொண்டாட்டங்களால் மூடி மறைக்காது இருளில் உள்ளதை வெளிச்சத்திற்கு கொண்டுவர ஒவ்வொரு தொழிலாளரும் திடசங்கற்பம் பூண வேண்டும். மேதினம் எமக்கு கொண்டாட்டமா? திண்டாட்டமா? என சிந்திப்போம்.

**தொழிலாளர்களின் பாதுகாவலரான தூய சூசையப்பர் எம் தொழிலாளர்களுக்காக பரிந்துரைக்க வேண்டுவோமாக.**

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**

# குருசடித்தீவில் மீண்டும் புனித அந்தோனியார் தரிசனம்


அருட்சகோதரி சுமித்திரா

யாழ் நகரின் புகழ் வாய்ந்த ஒல்லாந்தர் கோட்டையின் அருகில் ஊர் காவற்றுறைப் பண்ணை வீதியின் வலப்புறம் மண்டை தீவு சந்தியிலிருந்து 300 மீ. தொலைவில் நாவாந்துறை யிலிருந்து கடல் வழியாய் 2கி.மீ. தொலைவில் தென் கிழக்குத் திசையில் கடல் அலைதாலாட்ட அழகுற அமைந்தது தான் குருசடித்தீவு.

கடந்த 27 வருடங்களாக எம் நாட்டில் இடம் பெற்ற போரின் காரணமாக பல ஆலயங்கள் அடையாளம் அற்றுப் போனது நாம் அனைவரும் அறிந்ததே. அப்போரின் போது இத்தீவும் இலங்கைப்படையினரின் ஆக்கிரமிப்பிற்குள்ளானது மட்டுமல்லாமல் அங்கிருந்த அந்தோனியார் ஆலயமும் அழிக்கப்பட்டு மக்கள் செல்வதற்கு தடையும் விதிக்கப்பட்டு இருந்தது.

இத்தீவின் ஆரம்ப கால வரலாற்றை நோக்கும் போது யாழ். பண்ணை வீதி அமைக்கப்படுவதற்கு முன் மக்கள் கடல் வழியாக தீவுப் பகுதிக்கு பயணம் மேற்க் கொள்ளும் போது ஒரு இடைத்தங்கல் துறையாக இத்தீவைப் பயன்படுத்தினர். அதனால் இத்தீவு தோணித்துறை என்றும் அழைக்கப்பட்டது.

பண்ணை வீதி அமைந்த பின் நாவாந்துறை, கொக்குவில், ஆனைகோட்டை, சாவக்காடு, மானிப்பாய், சில்லாலை, பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய இடங்களில வாழும் மீனவர்கள் தங்கள் தோணிகளில் மாலையில் இத்தீவில் வந்து தங்கி இரவு நேரங்களில் மீன்பிடிக்கச் செல்வதுண்டு இவ்வாறு இத்தீவில் தங்கி தொழில் செய்தவர்களில் ஒருவர் தான் திரு. அந்தோனி இசிதோர். இவர் இத்தீவில் புனித அந்தோனியாருக்கு கோவில் அமைத்து அதில் மரத்தினால் செய்யப்பட்ட குருசையும் நாட்டினார்.

அன்று முதல் இதத்தீவு குருசடித்தீவு என மக்களால் அழைக்கபபட்டது. அதன் பின் அங்கு வந்து தங்கும் தொழிலாளர்களும் நாவாந்துறை ஊர் மக்களும் இச்சிற்றாலையத்தில் வழிபாடு செய்யத் தொடங்கினர். திரு. அந்தோனி இசிதோர் அவர்களும் நாள்தோறும் இரவில் மக்களோடு முதன் முதலாக அவ்விடத்தை தரிசித்து அதை துப்பரவு செய்வதற்கான பணிகளை மக்களுடன் ஆலோசிதது முன்னெடுத்தார்.

மக்களோடு ஒருவராக இணைந்து பல சிரமங்களின் மத்தியிலும் சிதைந்து போயிருந்த சிற்றாலயத்தை சூழவுள்ள பகுதியை மிக குறுகிய காலத்துக்குள்ளே துப்பரவு செய்தார். அதன் பயனாக ஏறக்குறைய 24 வருடங்களின் பின் 20-03-2012 அன்று புனித அந்தோனியாரின் திருச்சுருபம் மீண்டும் புதிதாக நிறுவப்பட்டு பங்குத் தந்தையால் மந்திரிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மீண்டும் குருசடித்தீவில் நீண்ட காலத்துக்குப பின் மக்கள் ஒன்று கூடி பலி ஒபபுக் கொடுக்க கிடைத்த சந்தர்ப்பத்தை முன்னிட்டு நாவாந்துறைப் பங்கு மகிழ்ச்சி அடைகின்றது.

இந்த நிகழ்வுககு சிரமதானப் பணிகளையும் கட்டிட வேலைப் பணிகளையும் மேற்கொண்ட நாவாந்துறை புனித மரியாள் ஆலய பங்கு மக்களின் பணிகளும் பங்குத் தந்தையின் முயற்சியும் அயராத உழைபபும் பாராட்டுதற்குரியதே. விளக்கேற்றி ஆலயத்தை நன்கு பராமரித்து வந்தார்.

1947ம் ஆண்டு பங்குனி 15ம் திகதி முதன் முதலாக புனிதருக்கு விழா எடுத்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. அதன் பின் ஆண்டு தோறும் நாவாந்துறையிலிருந்த பங்குத் தந்தையர்களின் உதவியுடன் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலய மக்களால் புனிதருக்கு விழா எடுக்கப்பட்டது.

காலப்போக்கில் இயற்கை அனர்ததங்களினால் ஓலையால் செய்யபபட்ட குடிசைக் கோயில் அழிந்து போனது. அதனால் திரு அந்தோனி இசிதோர் அவர்கள் மக்களிடமிருந்தும் தமது உறவுகளிடமிருந்தும் நிதியைத் திரட்டி கல்லினால் ஆலயத்தைக் கட்டினார்.

1983ம் ஆண்டிற்குப் பின் நாட்டில் இடம் பெற்ற உள் நாட்டுப் போர் விதிக்கப்பட்டது. இதற்கு காரணம் அங்கு கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டது. பின்னர் அரசாங்கத்தின் உதவியுடன் ஆலயத்தை சுற்றியுள்ள பகுதிகளில் காணப்பட்ட கண்ணி வெடிகள் அகற்றபபட்டன. இததீவு எவருமே உட்செல்ல முடியாதளவு புதர்கலும் சிறிய பற்றைகளாலும் மூடப்பட்டு காணப்பட்டது.

பங்குத்தந்தை அருட்பணி. பா.பி. இராஜசிங்கம் அவர்கள் பங்கு

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## பொதுநிலையினர் தினம் - 2012 பாடசாலை மாணவர்கள் கட்டுரைப் போட்டிகள் மறைமாவட்ட மட்டம் - முடிவுகள்

| | | |
|---|---|---|
| பிரிவு - 1 | 1. செல்வி. ஜெ. ஷேளோவா | - சுண்டுக்குளி பங்கு |
| | 2. செல்வன். நி. நிருஷகன் | - மல்வம் பங்கு |
| | 3. செல்வி. றெ. விஜித்திரா | - பெரியவிளான் பங்கு |
| பிரிவு - 2 | 1. செல்வி. த. ரொன்யா | - கரவெட்டி பங்கு |
| | 2. செல்வி. பொ. கீர்த்திகா | - புலோப்பளை பங்கு |
| | 3. செல்வி. கி. அனோஜினி | - பெரியவிளான் பங்கு |
| பிரிவு - 3 | 1. செல்வி. த. எமிலின் சிந்தியா | - கரவெட்டி பங்கு |
| | 2. செல்வி. றொஷாளி அன்ரன்ராஜ்குமார் | - O.L.R. யாழ் |
| | 3. செல்வி. மரியறுபினி | - பாசையூர் பங்கு |

இளையோருக்கான வில்லுப்பாட்டுப் போட்டி

1. சுண்டுக்குளி பங்கு - யா.ம.கோ
2. பருத்தித்துறை பங்கு - பரு.ம.கோ
3. நாவாந்துறை பங்கு - யா.ம.கோ

பெரியோருக்கான விவாதப் போட்டி

1. சுண்டிக்குளி பங்கு - யா.ம.கோ
2. புலோப்பளை பங்கு - பரு.ம.கோ
3. பாண்டியந்தாழ்வு பங்கு - யா.ம.கோ

தகவல்: செயலாளர்

# அனைவருக்கும் மறைக்கல்வி

**04**

(மறைக்கல்வி ஆண்டையொட்டி வெளிவரும் கட்டுரை தொடர்)

## மறைவாழ்வுக்கல்வியின் ஏழுபடிமுறைகள்

கிறிஸ்தவ வாழ்வின் நோக்கம் நம் ஆண்டவர் இயேசுவின் நற்செய்திக்கு சான்று பகர்வதாகும். அப்போதுதான் எல்லோரும் இறைவனின் அன்பையும் தூய ஆவியின் ஆற்றலையும் கிறிஸ்து வழங்குகின்ற மீட்பையும் உணர்ந்து வாழ்ந்து சான்று பகர முடியும். இதுவே கிறிஸ்தவ நம்பிக்கையாகும். எனவே மறை வாழ்வுக்கல்வியானது நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்தும் வளப்படுத்தும் பயிற்சியாகும். இதன் அடிப்படையில் தான் இறையனுபவத்திற்கு இறைவார்த்தை வித்திடுகின்றது, இறைவார்த்தையின் ஒளியில் தான் இறைவனோடு நெருக்கமான உறவை அநுபவிக்கமுடியும். இதனை நான்கு படிமுறைகளில் இறைவார்த்தையை வாழ்வாக்கமுடியும் என்பதை கற்றுக்கொண்டோம்.

### மறைவாழ்வுக்கல்வியின் ஏழுபடிமுறைகள்

**மறையுரைஞன்**

நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்துதல் என்பது ஒரு தொடர் பயிற்சியாகும். நம் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் கடவுள் நம்பிக்கையின் விதையை ஊன்றியுள்ளோர். விதைதானாக வளரமுடியாது. அது வளர்ச்சி பெற செய்து முதிர்ச்சியடையச் செய்வது திருமுழுக்குப்பெற்ற நம் ஒவ்வொருவரின் கடமையும் உரிமையுமாக உள்ளது. ஆகவே தான் எல்லோருக்கும் மறைவாழ்வுக்கல்வி அவசியமாகின்றது. இவ்வாறு நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சியும் முதிர்ச்சியும் என்ற இலக்கை எல்லோரும் உண்மையிலும் அன்பிலும் *(எபே 4:15)* வாழ்ந்து காட்டுவதன் வழியாக நிறைவேற்ற அழைக்கப்படுகின்றோம் நம்பிக்கை வாழ்வில் முதிர்ச்சி பெற ஏழுபடிமுறைகளை பின்பற்றி செயற்படுத்தலாம் என மறை அறிஞர்கள் முன்வைத்துள்ளனர்.

### முதல்படி: மறைவாழ்வுக்ல்வியின்செயல்கள்

எல்லோருக்கும் மறைவாழ்வுக்கல்வியில் பொதுமறைக்கல்வி வழி காட்டி பின்வரும் மறைவாழ்வுக்கல்வி செயற்பாடுகளை பரிந்துரைக்கின்றது. மறைவாழ்வுக்கல்வியின் இயல்பையும் எத்தகைய இலக்குகளை கொண்டிருக்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்துகின்றது. 1. மறைவாழ்வுக்கல்வி அடிப்படையில் நம்பிக்கை வாழ்வை பற்றிய போதனையாகும். நம்பிக்கை வாழ்வு பற்றிய தெளிவான புரிதலுக்கும் ஆழப்படுத்துவதற்கும் இன்றியமையாதது. 2. அர்த்தமுள்ள வழிபபாட்டிற்கு இட்டுச் செல்லும் மறைவாழ்வுக்கல்வியாக அமைதல் வேண்டும். நம்பிக்கைவாழ்வை வெளிப்படுத்துவது அருளடையாளங்களும் வழிபாட்டு செயற்பாடுகளுமாகும். 3. மறைவாழவுக்கல்வி இயேசுக்கிறிஸ்துவிடம் திரும்பிச்செல்லும் மனமாற்றத்தை தூண்டுவதாகவும் ஒழுக்கநெறி பயிற்சியாகவும் அமைதல் வேண்டும். மனமாற்றம் இல்லாமல் இறையுறவில் நிலைத்திருக்கமுடியாது அத்துடன் தூய்மையான வாழ்விற்கு ஒழுக்கநெறி சார்ந்த வழிகாட்டல் அவசியமாகின்றது. 4. இறைவேண்டல் செய்ய குறிப்பாக இறையனுபவத்திற்குள் நுழைய மறைவாழ்வுக்கல்வி கற்றுக்கொடுக்கவேண்டும். இதுவே நெருக்கமான இறையுறவிற்கு வழிவகுக்கும். 5. கடவுளை மட்டுமல்ல எம் அயலவரையும் அன்பு செய்ய தூண்டும் அன்பியங்களை கட்டியெழுப்பவும், சமூக அக்கறையை வளர்க்கவும் உதவிசெய்ய வேண்டும். அடிப்படையில் இயேசுவின் வழியில் வாழ மனமாற்றத்தை தந்து வழிநடத்த உதவ வேண்டும்.

### இரண்டாம்படி: கிறிஸ்துவில் வாழும் வழியே மறைவாழ்வுக்கல்வி

கிறிஸ்தவவாழ்வின் அடிப்படை மறைவாழ்வுக்கல்வியே! கிறிஸ்தவ வாழ்வு தினந்தோறும் நம்பிக்கை வாழ்வில் வளர்ச்சிபெற முயற்சிப்பதாகும். இறைமக்கள் சமூகமாக ஒன்றாக கூடி இறைவனை வழிபட்டு கிறிஸ்துவின் வார்த்தைகளை வாழ்வாக்குவதே மறைவாழ்வுக்கல்வியின் இலக்காகும். சடங்கு சார்ந்த கிறிஸ்தவத்திலிருந்து வாழ்க்கை முறை கிறிஸ்தவத்திற்கு உட்படுத்துதலாகும்.

### மூன்றாம்படி: மனமாற்றமே மறை வாழ்வுக் கல்வியின் அடித்தளம்

பொது மறைக்கல்வி (1997) வழிகாட்டி மனமாற்றமே அனை வருக்கும் மறைவாழ்வுக்கல்வியின் அடித்தளமாக சுட்டிக்காட்டப்படுகின்றது. மறையுண்மைகளை மட்டும் அறிந்து கொள்வதல்ல மறைவாழ்வுக்கல்வி. நமது இதயத்தை இயேசுவை நோக்கி திருப்புவதன் மூலம் இறையனுபவம் பெற்று நம்பிக்கை வாழ்வின் சாட்சிகளாக வாழுவதே மனமாற்றத்தின் வெளிப்பாடாகும்.

### நான்காம்படி : இறைமக்களுடன் ஒன்றித்த மறைவாழ்வுக்கல்வி

எல்லோருக்கும் மறைக்கல்வி என்பது திருவழிபாட்டிலும் அதன் அருளடையாளச்செயல்களுடனும் பின்னிப்பிணைந்துள்ளது. ஞாயிறு திருப்பலி, அருட்சாதன தகுந்த ஆயத்தங்களுடனூடான ஆவியின் துணையுடன் மேற்கொள்ளப்படும் செயல்பாடாகும்.

### ஐந்தாம்படி: மறைவாழ்வுக்கல்வியின் அடித்தளம் குடும்ப மறைக்கல்வி

ஒவ்வொரு குடும்பத்தையும் நம்பிக்கை வாழ்வின் மையமாக மாற்றுவதே மறைவாழ்வுக்கல்வியின் நோக்கமாகும். குடும்ப வட்டத்திற்குள் இறையுறவு சகோதர உறவு இறையன்பில் கட்டியெழுப்பப்படவேண்டும்.

### ஆறாம்படி : பங்குத்திருச்சபையாக மாற்றும் மறைக்கல்வி

மறைவாழ்வுக்கல்வி பாடசாலைகளை மையப்படுத்தியதாக அமையாமல் பங்கிலுள்ள அனைவரையும் உள்ளடக்கியதாக அமைதல் அவசியமாகின்றது. மாணவர்களை மட்டுமல்ல எல்லா பிரிவினரையும் ஈடுபடுத்தி நம்பிக்கை வாழ்வில் பயிற்றுவிக்கின்றது.

### ஏழாம்படி : கடவுள அருளும் எல்லோருக்கும மறைக்கல்வி

அருள் என்பது கடவுள் தம்மையே வெளிப்படுத்துவது ஆகும். கடவுளின் அருளின்செயற்பாட்டிற்கு நாம் பதிலிறுப்பதன் மூலம் நம்பிக்கை வாழ்வை ஆழப்படுத்தமுடியும். பக்தர்களாக அல்ல இயேசுவின் சீடர்களாக மாற பயிற்றுவிப்பதே மறைவாழ்வுக்கல்வியின் இலக்காகும்.

(கற்றல் தொடரும்)

## திருமறைத்தேர்வு - பொது வினாக்கள்

01. செபமாலைப் பக்தியை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் யார்?
**தூய சாமிநாதர்**

02. அன்னை மரியா மாசின்றி உற்பவித்தவர் என அறிக்கையிட்ட திருத்தந்தை யார்? எப்போது?
**திருத்தந்தை 9ம் பத்திநாதர், 1854ல்**

03. அன்னை மரியா "நானே அமல உற்பவி" என்று யாருக்கு? எப்போது வெளிப்படுத்தினார்?
**பிரான்ஸ் நாட்டு லூர்து கெபியில், பெர்ணபேத் எனற சிறுமிக்கு, 1854ல்**

04. மரியா உடலோடும், ஆன்மாவோடும், விண்ணேற்படைந்தார் என அறிக்கையிட்டத் திருத்தந்தை யார்? எப்போது?
**திருத்தந்தை 12ம் பத்திநாதர், 1950ம் ஆண்டு**

05. போர்த்துக்கேய நாட்டில், பற்றிமா என்னும் திருத்தலத்தில் மரியா எத்தனையாம் ஆண்டு? யாருக்குக் காட்சியருளினார்?
**பிரான்சீஸ், யசிந்தா, லூசியா என்ற சிறுவர்களுக்கு, 1917ம் ஆண்டு**

06. " என் ஆண்டவரின் தாய்" என மரியாவை முதலில் அழைத்தவர் யார்?
**எலிசபெத்**

07. அருளார் யோசவாஸ் அடிகளார் எங்கே? எப்போது பிறந்தார்?
**கோவாவிலுள்ள " சங்கோலே" என்னும் கிராமத்தில், 1651ஆண்டு 04மாதம் 21ம் திகதி**

08. யோசவாஸ் அடிகளாரின் தாய் மொழி என்ன?
**கொங்கணி**

09. யோசவாஸ் அடிகளார் இந்தியாவில் புத்துயிர் அளித்து உருவாக்கிய சபையின் பெயர் என்ன?
**தியான சம்பிரதாயச சபை (ஒறற்றோறியன்)**

10. யோசவாஸ் அடிகளாருக்கு வழித்துணையாக வந்திறங்கிய பயணத்தோழர் யார்? **ஜோண்**

11. யாழ்ப்பாணத்தில் அடிகளாருக்குப் பாதுகாப்புக் கொடுத்த கிராமம் எது?
**சில்லாலை**

12. இலங்கையில் கத்தோலிக்க மதம் வெளிப்படையாக தோற்றம் பெற்றது எப்போது? **போர்த்துக்கேயர் காலம்**

13. இலங்கையில் போர்த்துக்கேயரால் நிறுவப்பட்ட முதல் ஆலயம் எது?
**புனித லவுரேஞ்சியார் ஆலயம்**

14. போர்த்துக்கேயரின் வருகையின் போது யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னன் யார்? **ஜெகராசசேகரன் என்ற சங்கிலியன்**

15. யாழ்ப்பாண அரசில் முதல் மறைசாட்சியாக உயிர் நீத்தவர் யார்?
**சங்கிலி அரசனால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட அவனது மகன்**

16. சங்கிலி அரசனால் மன்னாரில் படுகொலை செய்யப்பட்டோர் யாவர்?
**அருட்திரு. யுவான் டீ லிசானோ அடிகளார் உட்பட 700 கத்தோலிக்கர்கள்**

17. சங்கிலியனின் மன்னார் படுகொலை எங்கே? எப்போ நடைபெற்றது?
**தோட்ட வெளி என்னுமிடத்தில் 1544 மார்கழியில்**

18. கண்டி நகரத்தில் யோசவாஸ் கட்டியெழுப்பிய சிற்றாலயம் எது?
**புறவினத்தவர் மனமாற்றத்தின் மாதா ஆலயம்**

19. யோசவாஸ் அடிகளார் யாரல் அருளாளராக? எப்போது திருநிலைப் படுத்தப்பட்டார்? **திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரால் 21.01.1995ல்**

20. திருக்குடும்ப கன்னியர் சபை இலங்கையில் கால்பதித்த ஆண்டு எது?
**1862ல்**

21. யாழ்ப்பாணம் தனி மறைமாவட்டமாக பிரிக்கப்பட்டது எப்போது? அதன் முதல் ஆயர் யார்?
**1886ல் முதல் ஆயர் மேதகு அன்றூ மெலிசன் ( அ.ம.தி ) ஆண்டகை**

22. யாழ். மறைமாவட்டத்தில் முதல் " கத்தோலிக்க பாதுகாவலன்" எப்போ வெளிவரத் தொடங்கியது? **1876ம் ஆண்டு முதல்**

23. யாழ். புனித மடுத்தீனார் குருமடம் எப்போது? யாரால்? தொடங்கி வைக்கப்பட்டது?
**1871ம் ஆண்டு, மேதகு பொஞ்சின் ஆண்டகை அவர்களால்**

24. மன்னார் மறைமாவட்டத்தின் மிகப் பெரும் யாத்திரைத் திருத்தலம் எது?
**மருதமடு**

25. இலங்கையில் உள்ள தமிழ் மறைமாவட்டங்கள் எத்தனை அவை எவை?
**மூன்று, யாழ்ப்பாணம், மன்னார், திருமலை – மட்டுநகர்**

26. யாழ். மறைமாவட்டத்தின் முதல் தேசிய தமிழ் ஆயர் யார்?
**மேதகு. ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை**

27. இலங்கையின் முதல் கருதினலாக பதவி வகித்தவர் யார்?
**மேதகு. தோமஸ் கூரே ஆண்டகை**

28. தற்பொழுது இலங்கையின் கருதினாலின் பெயர் என்ன?
**அதிமேதகு. மல்கம் றஞ்சித் ஆண்டகை**

29. இலங்கையில் உள்ள கத்தோலிக்க மறைமாவட்டங்கள் எத்தனை?
**பதினொன்று**

30. இலங்கைக்கான திருத்தந்தையின் பிரதிநிதியாக தற்பொழுது பணியாற்றுபவர் யார்? **அதிவண.ஆயர்.ஜோசப் ஸ்பிரிட்டரி ஆண்டகை**

- ஏஸ். ஏ. நாதர் -

## இன்று உலகில் 40 கோடி சிறார்கள் அடிமைகள்

இன்றும் உலகில் 40 கோடி சிறார்கள் அடிமைகள் போல் பணியாற்றி வருவதாக திரு அவை அமைப்புகளும் அரசு சாரா நிறுவனங்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

பெரும்பான்மையான சிறார்கள் பொருட்கள் உற்பத்தித் துறையில் பணியாற்றுவதாகவும், அத்தகைய பொருட்களே மேற்கத்திய நாடுகளில் விற்பனைக்கு வருவதாகவும் இவ்வறிக்கை மேலும் கூறுகிறது. தென் அமெரிக்கா, ஆப்ரிக்கா ஆகிய பகுதிகளின் கா.்.பி, வாழைப்பழம், பாகிஸ்தானின் தரை விரிப்புகள், இந்தியாவிலிருந்து வரும் ஆபரணங்கள், சட்டைகள் ஆகியவைகளில் சிறார்களின் உழைப்பு உள்ளது எனக் கூறும் இஸ்பானிய துறவு சபைகளின் கூட்டமைப்பு, குழந்தைகளுக்கு எதிரான உரிமை மீறல்களை எதிர்த்துப் போராட வேண்டிய அரசின் கடமைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என அழைப்பு விடுக்கிறது. ஏப்ரல் 16ம் திகதி உலகம் முழுவதும் சிறுவர் அடிமைத்தொழில் குறித்த விழிப்புணர்வு தினம் கடைபிடிக்கப்பட்டது.

# கைவிடப்பட்ட நிலையிலும் கடவுளை நோக்கி...

ஆண்டவர் இயேசுவின் பாடுகள் மரணத்தைக் குறித்து சிந்திக்கும் வேளையில் இயேசு சிலுவையில் கூறிய நான்காவது வார்த்தை மிக முக்கியமானதொன்றாகும். முதலாம், நான்காம், ஏழாம் வார்த்தைகள் கடவுளை நோக்கி எழுப்பப்படும் வார்த்தைகளாகும். மேலும் இயேசு தன்னைப் பற்றி சிந்திக்கின்ற ஓர் வார்த்தையாக இது காணப்படுகின்றது. *(மாற்கு 15:34)*

இயேசு சிலுவையில் கூறிய இம்மொழி இயேசுவின் கைவிடப்பட்ட பல அனுபவங்களின் ஓர் தொகுப்பாக காணப்படுகின்றது. இயேசுவின் பணிகளில் பலமுறை அவர் கைவிடப்பட்ட, நிராகரிக்கப்பட்ட அனுபவங்களை அனுபவித்துள்ளார். இவ் அனுபவங்களின் ஒன்றிணைப்பே சிலுவை அனுபவமாகும். *(யோவா 1:11)* மேலும் இக்கதறல் இயேசுவின் மனிதத்தன்மையின் பூரண வெளிப்பாடாகவும் மக்கள் தவறாக இயேசுவை புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாகவும் காணப்பட்டது. *(மாற் 15:34)* குறிப்பாக கடவுள் இயேசுவை கைவிடப்பட்ட அனுபவங்களுக்கூடாக வழிநடத்துகின்றார். ஏனெனில் அப்பொழுதே கைவிடப்பட்ட மக்களின் உணர்வுகளையும், அனுபவங்களையும் அவரால் புரிந்து கொள்ள முடியும். மேலும் இவ்வுலகில் கைவிடப்பட்ட மக்களின் பிரதிநிதியாக இயேசு கதறுகின்றார். தனிநபர், குடும்ப, சமூக, அரசியல், பொருளாதார, கலாசார விழுமியங்களால் பாதிக்கப்பட்டு கதற முடியாமல் துன்பங்களை அடக்கி வைத்திருக்கும் அப்பாவி மக்களின் பிரதிநிதியாக ஆண்டவர் கதறுகின்றார்.

என் தேவனே என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர் என்ற வார்த்தை நீதிக்காக போராடிய ஓர் அப்பாவி மனிதனின் கதறுதல் ஆகும். சமூக விடுதலைக்காக உண்மைக்காக வாழுவோர் தமது வாழ்க்கையில் நறசெய்திக்காக கிடைக்கப்பெறுகின்ற சீடத்துவத்திற்கான கிரயமே இக்கதறுதல் ஆகும். எனவே, நாம் வாழுகின்ற சூழ்நிலையில் நீதிக்காக உழைப்போருக்கு புதிய உத்வேகத்தை, நம்பிக்கையை ஏற்படுத்தும் கூற்றாகவும் இதைக் காணலாம். மேலும் இக்கூற்று நீதி, உண்மை, நேர்மை போன்றவைகளின் கைவிடபபட்ட அனாதைத் தன்மையையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அதாவது ஆண்டவர் இயேசு மாத்திரம் கைவிடப்பட்ட நிலைக்குள் பிரவேசிக்கவில்லை. மாறாக அவருடைய போதனைகளும் கைவிடப்பட்ட நிலையில் மக்களால் பின்பற்ற முடியாத நிலையில் காணப்பட்டதை நினைத்து இயேசு எழுப்பிய அவலக் குரலின் ஓர் தொகுப்பாகும். *(யோவா 6:66)*

என் இறைவா என் இறைவா ஏன் என்னை கைவிட்டீர் என இயேசு கடவுளை நோக்கி மன்றாடிய போதும் கடவுள் அதற்கு எத்தகைய பதிலையும் கொடுக்கவில்லை. அதற்கு கடவுள் இயேசுவின் மன்றாடலின் போது மௌனமாகவே இருந்தார். இம் மௌனம் எமது வாழ்க்கையில் பல்வேறு கடின சூழல்களுக்கூடாக நாம் செல்லும் போதும், பலமுறை கடவுளை நோக்கி மன்றாடிய போதிலும் பதில் கிடைக்க முடியாத சூழல்கள் ஏற்படுமாயின் கடவுளின் மௌனத் தன்மையை எமது வாழ்விலும் அனுபவிக்கக் கூடியவகையில் எம்மை நாமே ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சில சந்தர்ப்பங்களில் சமூக பாவங்களில் இருந்து மக்களை மீட்கும் அனுபவத்திற்கூடாக நாமும் அனுப்பப்படக் கூடும். இது தொடர் மீட்புக்கான ஓர் போராட்ட நிலையாகவும் காணப்படலாம். எனினும் கடவுள் இயேசுவை கைவிட்ட போதிலும் இயேசு அவரை கைவிடவில்லை. அதாவது கடவுளால் நான் கைவிடப்பட்டுள்ளேன் என உணர்ந்த போதிலும் கடவுளைக் கைவிடாது செயற்பட்டமை எமக்கு சவாலாக அமைகின்றது. அதாவது எம் வாழ்வில் ஏற்படும் துன்ப துயர அனுபவங்கள் பல சந்தர்ப்பங்களில் கடவுளை நோக்கி கேள்வி எழுப்ப எம்மைத் தூண்டுகின்றது. எனவேதான் பரிசுத்த பவுல் எந்த அனுபவமும் கடவுளை விட்டு எம்மைப் பிரிக்காதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என புத்திமதி கூறுகின்றார். *(உரோ 8:38,39)*.

இயேசுவின் கதறல் அநேகரை மனமாற்றத்திற்குள்ளாக்கியது. குறிப்பாக கைவிடபபட்ட நிலையில் இயேசு எழுப்பிய குரலை கேள்வியுற்ற நூற்றுவர் தலைவன் இயேசுவை இவர் 'இறைவனின் மகன்' என புகழாரம் சூட்டுகின்றார். *(மாற் 15:39)* மாற்கு தனது நற்செய்தியில் ஆண்டவர் இயேசுவை இறைமகனாக காண்பிப்பதற்கு முற்படுவதை நாம் காணலாம் *மாற் 1:1* இல் இயேசுவை இறைமகனாக காண்பிக்கும் ஆசிரியர் இப்பணி இயேசுவின் சிலுவையிலே நிறைவேறுவதை கூறுகின்றார். அதாவது ஆண்டவர் இயேசு துன்பத்தின் வாயிலாக, கைவிடப்பட்ட அனுபவத்தின் வாயிலாக இறைமகன் நிலைக்கு உயர்த்தப்படுகின்றார். இதனையே சுற்றிச் சுழலும் மாற்குவின் வட்டம் என நாம் கூறலாம். எனவே, மற்றவர்களின் நல்வாழ்விற்காக செயற்படும் ஒவ்வொருவரும் இறைவனின் மக்களாக மாறமுடியும். என்ற நம்பிக்கையை இது தருகின்றது. எனவே, சிலுவையிலிருந்து மொழியும் இவ்வார்த்தை துன்பத்தினூடாக கிடைக்கும் மாட்சிமையைப் பற்றிப் பேசுகின்றது.

கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட இயேசு பிறரைக் கைவிடாத சிலுவையினூடாக நம்பிக்கையை எமக்கு தந்தருளியுள்ளார். நாமும் கைவிடப்பட்ட மக்களின் பிரதிநிதியாக செயற்பட்டு அம்மக்களை மீட்பதே மீட்பு யாத்திரையின் இன்னுமோர் வடிவமாகும். இதனைத் தொடர்ந்தாற்றுமாறு சிலுவை எம்மை அழைக்கிறது.

ஆக்கம்:
அருட்பணி. அருளம்பலம் ஸ்ரீபன்
இலங்கை இறையியல் கல்லூரி
பிலிமத்தலாவ.

## ஆயிரத்துக்கு மேற்பட்ட......(1ம் பக்கத் தொடர்ச்சி)

அருட்சகோதரர் றமேஸ் அமதி

பத்திரிசியார் கல்லூரியில் ஒன்றுகூடி வலுச்சேர்த்துள்ளனர். காலை 8.30 மணிக்கு அமதிகளின் வடமாநில அமதிகளின் முதல்வர் அருட்தந்தை போல் நட்சத்திரம் அமதி அடிகளாரின் தலைமையில் சபைக்கொடியேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு மாலை 5.00 மணி வரை தொடர்ந்தது. காலையில் சிறுவர் மற்றும் இளையோர் பல குழுக்களாகப்பிரிக்கபபட்டு அவர்களின் உடல், உள, ஆன்மீக வளர்ச்சிக்கு பலன்தரக கூடிய நிகழ்வுகளும், மாலை அவர்களின் மனத்திற்கு விருந்தாகவும், சிந்தனைக்கு மருந்தாகவும் பல்வேறு அறிஞர்களின் உரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை மற்றும் பதுளை மாவட்டங்களில் வடமாநில அமதிகள் மேற்கொண்டுவரும் பல்வேறு பணிகளில் சிறுவர்களுக்கும் இளையோர்களுக்கும் அவர்கள் ஆற்றிவருகின்ற பணிகள் காலத்தால் அழியாதவை. தங்களது சபை நிறுவுனரின் விண்ணகப்பிறப்பின் 150வது யூபிலி ஆண்டின் நிறைவு விழாவை கொண்டாட அவர்கள் சிறுவர்களையும் இளையோர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியது இவர்கள் மட்டில் அமதிகள் கொண்டிருக்கும் அக்கறையையும் இவர்களின் வளர்ச்சியில் அமதிகளின் பங்களிப்பையும் எமக்கு காட்டுகிறது. இந்த நிகழ்வில் பங்கு பற்றிய யாழ்மறை மாவட்ட ஆயர், நலலை ஆதீன முதல்வர், நாக விகாரை பௌத்த குரு, யாழ் அரச அதிபர் ஆற்றிய உரைகள் அழிந்து கொண்டிருக்கும் இவ்வுலகில் சிறுவர்கள், இளையோர்கள் தங்கள் விழுமியங்களை எப்படி காத்துக்கொள்வது, வளர்த்துக் கொள்வது என்பதற்கு ஒரு வழிகாட்டலாக அமைந்தது. யாழ் அமதிகளின் மாகாணத்தைலவர் அருட் தந்தை போலநட்சத்திரம் அமதி அவர்களின் தலைமையுரை சிறுவர்கள் மட்டில் சமூகத்திற்கும், ஆன்மீக தலைவர்களுக்கும் இருக்க வேண்டி பொறுப்புக்களை படம்பிடித்துக் காட்டியதோடு, எதிர்காலத்தை நோக்கிய அவர்களின் இலக்கு மற்றும் அதை எட்டுகின்ற அவர்களின் நகர்வுகளையும் அடுக்கி வைத்தது.

ஒவ்வொரு குழந்தையும் ஒரு புதிய யுகத்தை படைக்க, புதிய வரலாற்றை எழுத பிறந்த இறைவனின் படைப்பு என்றால் மிகையாகாது. 'குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்று குழந்தையை கடவுளோடு இணைத்துப் பார்க்கும் கலாச்சாரப் பண்பாட்டில் வளர்கபபட்டவர்கள நாம். 'இறைவனது ஞானத்தை, திருவுளத்தை, வெளிப்பாட்டைப் பெறும் பேறு பெற்றவர்கள் குழந்தைகளே' என்ற இயேசு ஆண்டவரின் வார்த்தை விசுவாசத்தில் வேரூன்றி மறுகிறிஸ்துக்களாக வாழ அழைப்புப் பெற்றவர்கள் நாம். எமது வாழ்வியலில் சிறுவர்களோடு இரண்டறக் கலந்து வாழும் நாம் பெற்றோராக, ஆசிரியர்களாக, ஆன்மீக வழிகாட்டிகளாக, சமுதாயப் பெரியோராக, அவர்கள் மட்டில் எமக்கிருக்கும் பொறுப்புக்கள் என்ன என்பதுபற்றிச் சிந்திப்பது ஒவ்வொருவரினதும் தார்மீகப் பொறுப்பாகவுள்ளது. இன்று சிறுவர் துஷ்பிரயோகங்கள் நிறைந்து சிறுவர்களின் நிலை மோசமாகப் பாதிக்கபட்ட சமூகங்களையே நாம் காணமுடிகிறது. சிறகடித்துப் பறந்து ஆனந்தம் காணவேண்டிய சிறுவரெல்லாம் முகமலர்ச்சியற்று மூலையிலே முடங்கிக்கிடக்கும் நிலைதான் ஏனோ? பள்ளியிலே புள்ளி பெற்று தன் வாழ்வை உயர்த்த உத்வேகத்துடன் பயணிக்க வேண்டிய சிறுவர் எஞ்சிய கஞ்சிக்கு கோப்பை ஏந்தி, வீதியிலே தஞ்சம் புகும் அவலம் தான் ஏனோ....? இத்தனைக்கும் யார் பொறுப்பு? என்ற ஆழமான சிந்தனைகளை சமூகத்திற்கு அள்ளி விசியது அமதிகளின் இந்நிகழ்வு.

அன்று பிரான்சுப் புரட்சியின் வேதனைகளை ஆழச்சிந்தித்த சிறுவன் இயூஜின்தான் இன்று உயர்ந்து வளர்ந்திருக்கும் இலங்கைத்திருச்சபைக்கு அக்காலத்தில் வலுச்சேர்த்தவர். உயர் குலத்திலே, பணக்கார வர்க்கத்திலே, பிரபுக்கள் நிலையிலே பிறந்து வளர்ந்தாலும், புனித இயூஜின் சிறு வயது முதல் தன்னில் ஒலித்துக் கொண்டிருந்த இறைவனின் அழைப்பின் ஓசைக்கு செவி கொடுத்து வாழ்ந்தார் என்பதே பேருண்மை. இறைவனில் ஆழ்ந்த விசுவாசம், செபம், மரியன்னையில் நம்பிக்கை, நேர்மையான நேரடிப்பேச்சு, கூர்மையான அறிவு, ஈகையுள்ளம், ஏழைகள் மட்டிலான அன்பு போன்ற நல்ல பண்புகள் அவரின் இதயத் துடிப்பிலும், மூச்சிலும், பேச்சிலும் கலந்து வளர்ந்தன. பிரான்சியப் புரட்சியினால் சிறுபராயத்திலே இடத்துக்கு இடம் அலைந்து அகதி வாழ்வையும், துன்பங்களையும் அனுபவித்து வாழ்ந்த சிறுவன் இயூஜினின் சிறிய உள்ளத்தில், தன் மக்களை காப்பாற்ற வேண்டும் என்ற புரட்சியான எண்ணங்களே துளிர்விட்டன. ஆனாலும் இறைவனின் திட்டம் அவர் மட்டில் வேறுபட்டிருந்தது. தனது இளமையின் துடிப்புக்கு அடிமையாகிக் கொண்டிருந்த இயூஜின் டி மசனட்டாரின் உள்ளத்தில் ஆவியானவர் ஊடுருவினார். கடந்த கால வாழ்வு அவர் நினைவுக்கு வர அவர் உள்ளத்தில் உணர்வுகள் ஊறத்தொடங்கின. சிறைக்கூடம் நாடினார், சேரிகளைத் தேடிப்போனார், வைத்தியக் கூடம் சென்றார். 1807 இல் பெரிய வெள்ளியன்று சிலுவையில் அறையுண்ட இயேசுவை உற்று நோக்கினார், தன் நிகழ்கால வாழ்வை நினைத்தார், தெளிவுபெற்றார், உள்ளம் உருகினார், இயேசுவிடம் சரணடைந்து தன்னை அவருக்கே கையளித்தார். குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு இறைப்பணியை தொடர்ந்தார். சிறுவயதில் அவர் அனுபவித்த துன்பவடுக்கள், அகதி வாழ்க்கை, அவரை இயேசுவின் சிலுவையின் கண்ணோட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது. அக்காலத்தில் மக்களின் துன்பநிலையை கண்டு அவர்களுக்கு வாழ்வு கொடுக்க, இயேசுவின் நற்செய்தியின் ஒளியில் மக்களை ஒன்றிணைக்கப் புறப்பட்டார். கடவுளுடைய மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல்வாழ்விற்காகவும் தன்னை அர்ப்பணித்த புனித இயூஜின் டி மசனட், தன்னுடன் பயணிக்க கூடிய சில குருக்களையும் இணைத்து அமலமரித்தியாகள் சபையை நிறுவினார். இறைவனின் அழைப்பில் அவர் கொண்ட ஆழமான நம்பிக்கையாலும், மரியன்னை மட்டில் அவருக்கிருந்த பற்றுதலாலும் அமலமரித்தியாகிகள் சபை திருச்சபையால் இனங்காணப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. மிகவும் குறைந்த உறுப்பினர்களை கொண்டு தங்கள் பணியை ஆரம்பிக்க தொடங்கினாலும், உலகனைத்திற்கும் இயேசுவின் நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே இவரது விருதுவாக்கு. அவருடைய அந்த கனவுதான் இன்று இலங்கையில் அமதிகளின் பிரசன்னம்.

இன்று பல்வேறு வடிவங்களில் தாக்கப்பட்டு, போரின் வடுக்களை தம் உடலிலும், உள்ளத்திலும் சுமந்து தங்களின் இளம் உள்ளதில் விடைகாணா பல வினாக்களுடன் வருந்தும் எம் சிறார்களும், இளையோரும் இந்த உன்னத புனிதரின் பாதையில் பயணித்து, தம்வாழ்வில் ஓர் இலக்கமைக்க இன்றைய விழா அவர்களுக்கு ஒரு களம் அமைத்துள்ளது என்றால் அது மிகையாகாது. சிறுவர்களையும் இளையோர்களையும் முன்னிருத்தும் அமதிகளின் பணிகள் மேலும் இவர்களின் வாழ்வில் வெளிச்சத்தையும், ஒட்டுமொத்த சமுகத்திற்கும் ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்றைய எமது சிறுவர்கள் நாளை நல்ல விழுமியங்களோடும், மதிப்பீடுகளோடும், ஆன்மீக வாஞ்சையோடும் மனிதத்தை மதிக்கின்ற மகான்களாக வளர நாமெல்லாம் ஒன்றுபட்டு உழைப்போம். நல்லதோர் சமுகத்தை கட்டியெழுப்புவோம்.

# புனித நாட்டிற்கான ஒரு புனித பயணம்

பிலோமினா சுவாம்பிள்ளை
(முதலாவது யாத்திரைக்குழு சார்பாக)

**மறைக்கல்வி ஆண்டினை சிறப்பிக்க யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்கு செய்த புனித நாட்டிற்கான முதலாவது திருப்பயணம் 2012ம் ஆண்டு பங்குனி மாதம் 19ம் திகதி ஆரம்பித்து 26ம் திகதி நிறைவடைந்தது.**

"இதோ நான் கதவருகில் நின்று தட்டிக்கொண்டேயிருக்கிறேன். என் குரலைக் கேட்டு யாராவது கதவைத் திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவருந்துவேன்" *(தி.பா.3:20-21)* "புனித பயணம் - மறக்க முடியாத் யாத்திரை" என்ற அறிமுகத்துடன் அழைப்பு விடுக்கப்பட்டது. துரிதமாகச் செயற்பட்டோம். வழிகாட்டிகள் உட்பட 33பேர் குழுவாக இணைந்து கொண்டோம். குதூகலமாக யாத்திரையை ஆரம்பித்தோம்.

ஆகாய தரைவழிப் பாதைகளைத் தாண்டி 20/3ல் யோர்தானில் கால் பதித்தோம். 21/3 கலிலேயாவை நோக்கிப் பயணித்தோம். யோர்தான் நதி ஒரு நன்னீர்த் தேக்கம். ஆயினும் கலிலேயாக் கடல் என்று அழைக்கப்படுகிறது. 25கி.மீ நீளம் 15கி.மீ அகலம் 50கி.மீ ஆழம் கொண்டது. இங்கே தான் இயேசு 5 அப்பங்களைப் பலுகச் செய்தார்; இதன்மீது இயேசு நடந்து வந்த போது தான் பூதம் என்று பேதுருவும், சீடர்களும் கலங்கினர். புயலை அடக்கியதும் இங்கேதான். பேதுரு இந்தக் கடலிலே தான் மீனைப் பிடித்து இயேசுவுக்காகவும் தனக்காகவும் பலி செலுத்தினார். அந்த மீனையே ஒருநாள் மதிய உணவின் போது சுவைக்க முடிந்ததையும் மறக்க முடியாது.

அடுத்து "ஆண்டவரின் ஆவி என்மேலே" என்று இயேசு அறிக்கையிட்ட தொழுகைக்கூடம், புனித பேதுருவின் வீடு, அவரின் மாமியாரைக் குணப்படுத்திய இடம் ஆகியவற்றை தரிசித்து மகிழ்ந்தோம். கலிலேயாக் கடலிற்கு திபேரியாக்கடல் என்றும் பெயர். இதனை அண்மித்திருந்த ஒரு குன்றிலிருந்து தான் இயேசு போதித்தார். இதனையே மலைப் பொழிவு என்று அழைக்கின்றோம். *(மத் 5:1-8)* இது எட்டுப் பேறுகளை உள்ளடக்கியதாக இருக்கிறபடியால் இந்த இடத்தில் எண் கோண வடிவில் கோவில் நிர்மானிக்கப் பட்டிருக்கிறது.

அடுத்த நாள் நசரேத்தை நோக்கிப் பயணித்தோம். மாதாவிற்கு மங்கள வார்த்தை *(லூக்: 1:26-38)* சொல்லபபட்ட இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிற கோவிலை நேரில் பார்வையிட்டோம். அங்கே திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. இது அன்றைய நாளின் செயற்பாடுகளுக்கு மெரு கூட்டுவதாய் அமைந்தது.

ஜெரிக்கோ செல் லும் பாதையில் அடர்ந்த பேரீஞ்ச மரங்களிடையே நாலா பக்கமும் கிளைகளைப் பரப்பிய நிலையில் காணப்பட்ட காட்டு அத்தி மரத்தையும் அதில் ஏறியிருந்து தான் சக்கேயு இயேசுவை எதிர்கொண்டார் என்பதையும் புரிந்து கொண்டோம். *(லூக் 19, 1-10* ஜெரிக்கோ நகரில் குருடன் ஒருவன் குணமடைந்ததையும், ஜெரிக்கோவுக்குப் பயணம் செய்த நல்ல சமாரியன் உவமையையும் நினைவுக்குட்படுத்தினோம். *(லூக் 10: 25-37)* திருமுழுக்கு யோவான் வனாந்தரத்தில் தேனுக்காகப் பயன்படுத்திய "கரட்" மரத்தையும் கண்டோம். இது எமக்கு ஒரு புதிய அனுபவமாய் இருந்தது. 38 வருடங்களாக முடக்குவாதம் உடையவன் குணமடைந்த பெத்சதா எனப்படும் ஆட்டுக் குளத்தை நேரில் காண முடிந்தது. *(யோவான் 5:1-16)* புனித ஸ்தேவான் அழைத்துச் செல்லபபட்ட இடத்தையும் தரிசித்தோம்.

கானா ஊரில் இயேசுவின் முதல் புதுமையான நீரை இரசமாக்கிய இடம், அதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஆறு கற்சாடிகளில் ஒன்று ஆகியவற்றைக் காண முடிந்தது. இங்கே திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாத்திரிகர்களில் மூன்று தம் பதியினரின் திருமண வார்த்தைப்பாடு புதுப்பிக்கப்பட்டது.

யோர்தான் நதியில் திருமுழுக்கு யோவானிடம் இயேசு திருமுழுக்கு பெற்ற வேதாகமப்பகுதியை *(மத் 3: 13-17)* வாசித்து எங்களின் திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பித்துக் கொண் டோம் மிக உயர்ந்த தபோர் மலையில் ஏறினோம். கண்ணுக்கு எட்டாத உயரம், செங்குத்தாக ஏற முடியாது. பத்துப்பேரை மட்டும் கொண்டு செல்லக்கூடிய சிறிய வாகனம் ஒன்றில் பயணித்தோம். சுமார் முப்பது வளைவுகளை உள்ளடக்கியதாகப் பாதை அமைககபபட்டிருந்தது இயேசுவின் மறுரூபமான காட்சி அருகில் எலியாவும் மோசேயும், கீழே தெரிந்து கொள்ளப்பட்ட மூன்று திருத்தூதர்கள், என்பவற்றை தத்ரூபமாக கலை வடிவத்தில் கொடுத்திருந்தார்கள் *(மத் 17:1-13).*

அடுத்து இறைவனின் சாபத்துக்குள்ளாகி அழிந்து போன சோதோம் கொமரா நகரங்களின் இடத்தில் தற்போது இருக்கின்ற சாக்கடலை அடைந்தோம். உலகத்திலேயே மிகவும் பள்ளமான பகுதி. எந்த ஒரு ஜீவராசியும் உயிர் வாழ முடியாததான உவர்ப்புள்ள தண்ணீர். எல்லா திருப்பயணிகளும் ஆனந்தமாக நீராட தடை விதிக்கப்படவில்லை. பின்னர் இயேசு சோதிககப்பட்ட இடத்தை கேபிள் கார்மூலம் ஏறிச் சென்று மேலே இருந்து பாாவையிட்டோம். இவ்விடத்தில் அமைக்கப்பட்டிருக்கிற ஆலயம் கி.பி. 4ம் நூற்றாண்டில் கட்டப்பட்டாலும் கி.பி. 1936ல் தான் புதுப்பிக்கப்பட்டதென்பதையும் தெரிந்து கொண்டோம். நயீம் பட்டணத்தை அடைநதோம். நயீம் பட்டணத்து விதவையின் விசுவாசத்தை நினைவுபடுத்திக் கொண்டோம்.

இயேசு எம்மாவுஸ் சீடருடன் பயணித்து அவர்களோடு தங்கி உணவருந்திய போது அப்பத்தைப் பிட்டு தம்மை வெளிப்படுத்திய இடத்தையும் காண முடிந்தது. *(லூக் 24: 13-35)*

பெத்லேகேம் நகரை அடைந்தோம். இயேசுவின் பிறப்பு இடம்பெற்ற இடத்தைப் பார்த்தோம். மாதாவின் வடு, யோசேப்பு தச்சு வேலை செய்த இடமனைத்தும் எங்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இயேசு பிறந்ததாகக் கூறப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் அன்றைய திருப்பலியை நத்தார் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தோம்.

இயேசு சீடர்களுக்குப் பரலோக மந்திரம் சொல்லிக் கொடுத்த இடத்தை அடைந்தோம். தமிழ் உட்பட 129 மொழிகளில் இச்செபம் எழுதப்பட்டிருந்தது. நாமும் கரங்களை உயர்த்தி உருக்கமாக இதனை செபித்தோம். இயேசு பரலோகத்துக்கு எழுந்தருளிய பகுதியை அடைந்தோம். அங்கே அவரின் இருகால்கள் மிகவும் தெளிவாகப் பதிந்திருந்தமை எம்மை மெய் சிலிர்க்க வைத்தது. அடுத்துத் திருமுழுக்கு யோவான் பிறந்த இடமும் சக்கரியாவின் நாவு கட்டவிழ்க்கப்பட்டதுமான இடங்கள் எங்களுக்கு அறிமுகம் செய்யப் பட்டன. சக்கரியாஸ் பாடிய பாடலை நாமும் பாடி மகிழ்ந்தோம் *(லூக் 1:57-80)*

தேவதாய் குழந்தை இயேசுவுக்கு பால் ஊட்டிய போது சிந்திய இரு துளிகளால் முற்றும் வெண்ணிறமாகிவிட்ட குகையின் அற்புதத்தைக் கண்டு அதிசயித்தோம். இக் குகையிலிருந்து சொரியும் ஒருவகைப் பவுடர் மகப்பேறற்றவர்களுக்குத் தாய்மையடைய செய்யும் சக்தியை அளிப்பதாகவும் அறிந்து கொண்டோம்.

இயேசுவின் கடைசி இராப்போசன மாடி அறையை அடைநதோம் *(லூக் 22: 14-23)* தேவ மாதாவும் திருத்தூதர்களும் கூடியிருந்து ஜெபித்த போது தூய ஆவியானவர் அக்கினி மயமாக அவர்கள் மேல் இறங்கி வந்ததாகக் கூறப்படும் அறையும் இதுவே. நாங்களும் தூய ஆவியை வரவேற்றுப் பாடல்கள் எழுப்பினோம். இயேசு குருத்தோலை ஞாயிறன்று ஆடம்பரமாக பவணியாக அழைதது்ச் செல்லப்பட்ட ஜெருசலேம் நகரின் பொன்வாயில் பகுதிகளில் நாங்களும் கால் பதிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒலிவக்கிளைகளுடன் இயேசு அரசனாக அழைத்துச் செல்லப்பட்ட பகுதியை வேதாகம வசனங்களுடன் நினைவுபடுத்திக் கொண்டோம்.

புண்ணிய பூமியைக் கைப்பற்ற முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே இடம்பெற்ற சிலுவைப்போரில் கிறிஸ்தவர்கள் பின்வாங்கி விட்டபடியால் இன்று ஜெருசலேம் தேவாலயம் முஸ்லீம்களின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. ஆனால் இயேசு ஜெருசலேமைப் பார்த்துக் கண்ணீர் விட்டழுதமாதிரி *(லூக் 13:34-35)* தேவாலயம் அழிவுற்று ஒரு பக்கச் சுவர் மட்டுமே இன்று எஞ்சியிருக்கிறது.

எனினும் இச்சுவரின் வெடிப்புக்கள் உடைவுகளுக்கூடாக யூதர்கள் தஙகள் தேவைகளுக்கு எழுத்துருவம் கொடுத்துச் சொருகி வைத்து வருகிறார்கள். யாவே அடுத்த பக்கத்தில் இருந்து நிட்சயம் பதில் தருவார் என்று நம்புகிறார்கள். யாத்திரிகள் அனைவரையும் இந் நடைமுறையை பின்பற்றி வருகின்றார்கள். நாங்களும் எமது விண்ணப்பங்களை எழுதி அப்பகுதிகளிடையே சொருக தவறவில்லை. இயேசுநாதர் சிறை வைக்கப்பட்டிருந்த மிகவும் தாழ்வான பாதாள அறையைச் சென்றடைந்தோம். அவர் அங்கே இடைவிடாது செபித்த 88வது திருப்பாடலை நாமும் செபித்தோம். யூதாசினால் தூக்கி வீசப்பட்ட 30 வெள்ளிகளுக்கு விலையான கெதரோன் பள்ளத்தாக்குப் பாதையில் அமைந்திருந்த இரத்த நிலமும் எங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இடையர்கள் வாழ்ந்து வந்த பகுதி, வான தூதர்கள் இயேசுவின் பிறப்புப் பற்றி அறிவித்து புகழ் இசைத்த இடையர்களின் வயல்களையும் எம்மால் தரிசிக்க முடிந்தது.

அடுத்து ஒலிவமரங்களால் சூழப்பட்ட ஜெத்ஸமெனித் தோட்டத்தை அடைந்தோம். இங்கே தான் இயேசு மரண வேதனை உற்றார். இங்கே அவர் தனிமையாக இருந்து வேதனை நிரம்பியவராய் துயரப்பட்டதையும், தூரத்தில் திருத்தூதர்கள் மூவரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதையும் மிகவும் துல்லியமாகத் சித்தரித்திருந்தார்கள். இங்கே நான்காம் நாளுக்கான திருப்பலி ஒபபுக்கொடுக்கப் பட்டது.

இராயப்பர் இயேசுவை மறுதலித்த இடம், சேவல் கூவியபகுதி இவற்றையும் நேரில்பார்த்தோம். தேவமாதா எலிசபேத்தம்மாளைச் சந்தித்த அந்தக் கிணற்றடியில் நின்று எலிசபேத்மாளின் வீட்டை நோக்கினோம். 153 படிகளைத் தாண்டித்தான் வீட்டை அடையலாம். தயங்காமல் தாவி ஏறினோம். இப்படிகள் குழுச் செபமாலையின் 153மணிகளை எமக்கு நினைவூட்டின. அங்கே மாதா "என் ஆன்மா ஆண்டவரைப் போற்றுகிறது" *(லூக் 1: 46-56)* என்று பாடிய பாடல் 53 மொழிகளில் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டோம்.

(அனுபவம் அடுத்த இதழில் தொடரும்)

## சிந்திக்க ஓர் சித்திரம்




## தமிழகத்தில் தொலைக்காட்சி பார்ப்பவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

தமிழகத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை, ஏறத்தாழ 17 வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக "ஆபாக்ஸ்" என்ற இந்திய ஊடக விளம்பரங்களைச் சந்தைப்படுத்துவோருக்கான நிறுவனத்தின் ஆய்வு தெரிவிக்கிறது.

தமிழகத்தில் கடந்த மாசி மாதம் தொலைக்காட்சி பார்த்தவர்களின் எண்ணிக்கை, அதற்கு முன்னைய மாதம் பார்த்தவர்களை விட 17 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது என தெரிவிக்கப் பட்டுள்ளது.



## திருமணயூபிலி
## இல்லற வாழ்வில் ஐம்பது ஆண்டுகள்
1962 – 2012



அலைவந்து அழகோடு கரைதன்னை முத்தமிடும்
நாவாந்துறைத் திருச்சபையில் வளமோடு வாழ்ந்திட்ட
பொன்விழாத் தம்பதிகள் செலஸ்ரின் - ஜோன் ஒப் ஆர்க்
மகிழ்வோடு தொடர்ந்து வாழ இறையருள் வேண்டுகின்றோம்

மூவொரு இறைவனின் உடனிருப்பு என்றென்றும்
நிறைவாக இவர்களுடன் நிலைத்திருக்க வேண்டுகின்றோம்
எதிர்காலம் சிறப்புறவும் துன்பங்கள் நீங்கிடவும்
உறவுகள் ஒன்றிணைந்து அன்போடு வாழ்த்துகின்றோம்

பொன்விழா நன்றித்திருப்பலி 02-05-2012 நாவாந்துறை தூய மரியாள் ஆலயத்தில் பி.ப.4.00 மணிக்கு ஒப்புகொடுக்கப்படும்.

474/14 கடற்கரை வீதி
சூரியவெளி, நாவாந்துறை வடக்கு.

Add: 34/12

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு



### சூசைப்பிள்ளை
### அந்தோனிப்பிள்ளை (யூட்)

பிறப்பு 1952-05-28
இறப்பு 2011-04-30

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

ஆண்டுகள் ஒன்று ஆனாலும்
உம் நினைவு எம்முடன் கூடவே
உள்ளது ஆறாத எம்துயர்
நீங்கள் வந்தால் ஆறுமப்பா
ஆண்டவர் பாதத்தில் உம் ஆன்மா
சாந்தி பெற அனுதினமும் வேண்டுகிறோம்.

உங்களை அன்புடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்.

Add: 41/12 செல்வபுரம், முல்லைத்தீவு.

### குருசடித்தீவில் மீண்டும் புனித..... (2ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களோடு முதன் முதலாக அவ்விடத்தை தரிசித்து அதை துப்பரவு செய்வதற்கான பணிகளை மக்களுடன் ஆலோசித்து முன்னெடுத்தார்.

மக்களோடு ஒருவராக இணைந்து பல சிரமங்களின் மத்தியிலும் சிதைந்து போயிருந்த சிற்றாலயத்தை சூழவுள்ள பகுதியை மிக குறுகிய காலத்துக்குள்ளே துப்பரவு செய்தார். அதன் பயனாக ஏறக்குறைய 24 வருடங்களின் பின் 20-03-2012 அன்று புனித அந்தோனியாரின் திருச்சுரூபம் மீண்டும் புதிதாக நிறுவப்பட்டு பங்குத்தந்தையால் மந்திரிக்கப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மீண்டும் குருசடித்தீவில் நீண்ட காலத்துக்குப் பின் மக்கள் ஒன்று கூடி பலி ஒப்புக் கொடுக்க கிடைத்த சந்தர்ப்பத்தை முன்னிட்டு நாவாந்துறைப் பங்கு மகிழ்ச்சி அடைகின்றது.

இந்த நிகழ்வுக்கு சிரமதானப் பணிகளையும் கட்டிட வேலைப் பணிகளையும் மேற்கொண்ட நாவாந்துறை புனித மரியாள் ஆலய பங்கு மக்களின் பணிகளும் பங்குத் தந்தையின் முயற்சியும் அயராத உழைப்பும் பாராட்டுதற்குரியதே.

## 40ம் நாள் நினைவின் நிழல்

மலர்வு 13 - 07 - 1921
உதிர்வு 04 - 03 - 2012



### திரு. S. தோமஸ் சிறீநாதன்

"ஆண்டவரை உம் புகலிடமாய் கொண்டீர்
உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்." (தி.பா.91:9)

அன்பான பப்பாவாகவும், இறையன்பில் எம்மையெல்லாம் ஆழமாக வழிநடத்தியும், பல உயர்ந்த நற்பண்புகளை கண்டிப்புடன் எமக்குணர்த்தியும் வாழ்ந்தீர்கள். இயேசுவே! இவரின் ஆன்மா என்றும் உமது திருமுக ஒளியில் இன்புற்றிருக்க உம்மை தினமும் மன்றாடுகின்றோம்.

426/16, 4/1, புளுமண்டால் வீதி
V.T.V. COURT
கொழும்பு : 13 (T.P. 0112541459)

உங்களை அன்புடன் நினைவு கூரும்
மக்கள், மருமக்கள் பேரக்குழந்தைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Add: 35/12

**பிறருக்கா வாழ்வதே, பிறவிப் பெரும் பயன்... வேப்பமரம் சொல்லும் வேதம்.**

# இளையோர் மறைக்கல்வி

அருட்சகோதரி. யூடினா செல்வநாயகம் (தி.கு.க)

திருச்சபையின் முதுகெலும்பாகவும் இதயமாகவும் இயக்கமாகவும் உள்ளது திருவிவிலியமே. விசுவாச வளர்ச்சியையும் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியையும் பேணி வளர்ப்பதே மறைக்கல்வியின் பணியும் பொறுப்பும் ஆகும். சிறப்பாக மறைக்கல்வி ஆண்டான இவ்வாண்டில் 'எல்லோருக்கும் மறைக்கல்வி' என்பதே அதன் மையக் கருத்தாகும். அந்தவகையில் குழந்தைகள், சிறார்கள், இளையோர், வயதானோர், மாற்றுத் திறனாளிகள், புறம் தள்ளப்பட்டோர் எனும் சிறப்பு நிலையினர் இதனுள் அடங்குவர்.

இதில் 'இளையோர்' என்பவர்கள் திருச்சபையின் முக்கிய தூண்களாவர். புனித பவுல் கொலோசியருக்கு கூறியதுபோல "கிறிஸ்துவைப் பற்றியே நாங்கள் அறிவித்து வருகின்றோம். கிறிஸ்துவோடு இணைந்து ஒவ்வொருவரும் முதிர்ச்சி நிலை பெறுமாறு ஒவ்வொருவருக்கும் அறிவுரை கூறி முழு ஞானத்தோடு கற்பித்து வருகின்றோம்." *(கொலோ 1:28)* பறைசாற்றுதல், அறிவுரை கூறல், ஞானத்தோடு கற்பித்தல், கிறிஸ்துவில் இணைந்து முதிர்ச்சிநிலைபெற வைத்தல். இவை நான்கும் நற்செய்தியாளரின் அதாவது மறைக்கல்வியாளரின் பணி ஆகும். இளையோர் மறைக்கல்வியானது எதிர்காலத்தில் உறுதியான ஈடுபாடுள்ள முதிர்நிலைக் கிறிஸ்தவர்களை உருவாக்க வேண்டும் என்று சிரில் டிசோசா கூறுகின்றார்.

இளையோர், மறைக்கல்வியின் நோக்கமாக மட்டுமல்லாமல் ஈடுபாடுள்ள கருப்பொருட்களாகவும், நற்செய்தியின் தூதுவர்களாகவும், சமூக மாற்றத்தின் ஊற்றுக்களாகவும் இருக்கின்றார்கள். இளையோர் மறைக்கல்வி நம்பிக்கையின் வளர்ச்சி என்பதால் அது ஆழமான நம்பிக்கை வாழ்வின் முதிர்ச்சியையும் அதை வாழ்ந்து காட்ட ஆசையையும் தூண்டுவதாக இருக்க வேண்டும்.

**'இளையோர் மறைக்கல்வி'** என்ற மையக்கருத்தில் இன்றைய இளையோர் பற்றியும் அவர்களுக்கான மறைக்கல்வியின் தேவை பற்றியும் சற்று சிந்திக்க வேண்டும். நவநாகரீக உலகில் சமூகத்தின் ஆன்மீக மற்றும் கலாசார சீரழிவில் முதலில் நுழைபவர்களும் தாக்கத்திற்கு உட்படுபவர்களும், ஈர்ப்புக்குள்ளாபவர்களும் இளைஞர் என்பதால் அதிகம் பாதிக்கப்படுபவர்களும் இவர்களே.

**இளைஞனே!** உன் ஆன்மீகம் எங்கே? என்று கேள்வி கேட்கக் கூடிய அளவுக்கு இன்றைய இளைஞர்களின் நிலை, அவர்களின் ஆன்மீகம் காணப்படுகின்றது. அவர்கள் சினிமாவில் அதிக தாகம் உள்ளவர்களாகவும் களியாட்ட குடிவெறியில் அதீத ஆசை உள்ளவர்களாகவும் காணப்படுகிறார்கள். அதுமட்டுமா, அவர்களுக்கு ஞாயிறு திருப்பலி இல்லை, ஆனால் இன்ர - நெற்றில், நீலப்படம் பார்ப்பார்கள். வயதில் மூத்தவரை மதிப்பதில்லை ஆனால் நடிகை, நடிகருக்கு அபாரமரியாதை செலுத்துவார்கள். கோயில் பக்கம் செல்வதில்லை, ஆனால் கடைத்தெருவில் பல மணி நேரம் அரட்டை அடிப்பார்கள். முகம் தெரியாதவர்களுடன் பலமணி நேரம் தொலைபேசியில் பேசுவார்கள். செபமாலை இல்லை தொலைக்காட்சியில் தொடர் நாடகம் பார்ப்பார்கள். இப்படிப்பட்ட இளையோரைக் கொண்டதாக இன்றைய உலகம் மாறி வருகின்றது. இந்நிலைமாற இவர்களுக்கு மறைக்கல்வி தேவை இவர்கள் மறைக்கல்வியின் தார்ப்பரியத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

2ம் அருளப்பர் சின்னப்பர் கூறியது போல "மறைக்கல்வியின் தனிப்பட்ட நோக்கம்", இன்னும் தொடக்கநிலையில் உள்ள விசுவாசத்தை இறைவனின் அருட்துணையால் வளர்ப்பதும், இளவயதினர், முதிர்வயதினரான விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்வுக்கு நாளுக்கு நாள் உணவூட்டி அதை நிறைவுக்கு கொண்டு செல்வதுமாகும். தொடக்க அறிவிப்பில் தூயஆவி விதைத்தும் திருமுழுக்கில் நிச்சயமாக அளிக்கப்பட்டதுமான விசுவாச விதைக்கு அறிவு மட்டத்திலும் வாழ்க்கை மட்டத்திலும் வளர்ச்சி கொடுப்பதால் இந்த நோக்கம் நிறைவு பெறும் என கூறுகின்றார். இவர் இளையோருக்கான மறைக்கல்வியின் தேவையை வலியுறுத்துகின்றார். இனிவரும் காலம் இளையோருடையது எனவே எப்படியும் வாழலாம் என்பதைவிட இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒரு கட்டுக்கோப்பை உருவாக்கி ஒழுங்கு முறையான வாழ்வை சுட்டிக்காட்டுவதும் அவர்களின் ஆன்மீக வாழ்வை வளப்படுத்துவதும் மறைக்கல்வியே.


எனவே மறைக்கல்வியை கற்போம் கற்பிப்போம் என்பதை அடிப்படையாகக் கொண்டு மறையைக் கற்று அதை ஏனையவர்களுக்கு முன்மாதிரியாக இருந்து கற்பிக்க இளைஞர் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகிறார்கள்.

## விண்ணக வாழ்வின் மூன்று ஆண்டுகள் நிறைவில் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1949-02-18
ஆண்டவன் அடியில் 2009-04-23

"நீர் இன்று என்னோடு
பேரின்ப வீட்டில் இருப்பீர்"
*(லூக்: 23-43)*

முன்னே சென்ற உன்னோடு
முழுதாய் நாமும் தொடர்ந்தோம்
சன்னங் கொண்டு வீழ்ந்தாய்
சரிந்தே போனோம் நாமும்!
அன்பின் தருவாய் இருந்தாய்
அதன் கீழ் அழகாய் வாழ்ந்தோம்
வன்னியில் வனதந்தே வீழ்ந்தாய்
வசந்தம் சிதைந்து போனோம்
வாழ்க்கை சவாலாக, பாதை கரடாக, வாழ்கின்றோம் உன் நினைவுகளின் துணையோடு!



### யோசெப்மரியநாயகம் மேரிபிலோமினா (மலர்)

உம் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

தவசிகுளம்
மிருசுவில்

Add: 39/12

# உலகளாவிய ரீதியிலான இறையழைத்தல் வேண்டுதல் தினம்

## "நலிந்தோரை திடப்படுத்த இயேசு ஆண்டவர் உன்னை அழைக்கிறார்"
## - மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி. எமில் போல் அடிகள் -

"நானே என் மந்தையை மேய்த்து இளைப்பாறச் செய்வேன்" என்கிறார் தலைவராகிய ஆண்டவர். "காணாமல் போனதை தேடுவேன்" அலைந்து திரிவதை திரும்பக் கொண்டுவருவேன், காயப்பட்டதற்கு கட்டுப் போடுவேன்? நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன்? வலிமையுள்ளதை பாதுகாத்துக்கொள்வேன். இவ்வாறு நீதியுடன் அவற்றை மேய்ப்பேன்" *(எசேக்கியேல் 34: 15-16).*

'எல்லாம் வல்ல இறைவன் தம் மக்கள் மீது கொண்டுள்ள அன்பு எல்லையற்றது" என பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகமத்தில் காணப்படும் 'இஸ்ரயேலின் ஆயர்கள்", மற்றும் 'நல்ல ஆயன்" என்ற பகுதியில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இவ்வாறு வீழ்ந்த, காணாமற்போன தம் மக்களை மீட்டெடுக்கும் பொறுப்பை தனது ஒரே மகனான இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைத்ததன் மூலமாக தனது அன்பை முழுமையாக வெளிப்படுத்தியுள்ளார்.

"மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கே வந்தார்...." *(மத் 20:25)* "நோயுள்ளவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்' *(லூக் 5: 32)*

"நல்ல ஆயன் நானே, நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்.. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்..." *(யோவான் 10:14-15)* என்பவற்றின் ஊடாக இவ்வுண்மை தெளிவாகிறது. இவ்வாறு பார்க்கும் பொழுது, நலிந்தோரைத் திடப்படுத்த இறைவனாகிய தந்தையும், இறைமகனாகிய இயேசுவும் எவ்வாறு செயற்பட்டார்கள். செயற்படுகிறார்கள் என்பது தெளிவாகின்றது.

இன்றைய நவீன உலகில், உலகம். சரீரம், பசாசு என்பவைகளின் சோதனைகளினால் பாவத்தில் விழும் மக்கள் அநேகர். நாளுக்கு நாள் மனிதரிடம் காணப்படும் ஆணவம், சுயநலம், நான் மட்டுமே என்ற எண்ணம் அதிகரிக்கின்றனவே தவிர குறைவதில்லை.



பல புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புக்களும், தொழில்நுட்ப முன்னேற்றமும் மனிதனை மேன்மேலும் தன்னைப்பற்றியே நினைத்தவனாக சுயநலவாதியாக்குகின்றன. சகோதர அன்பு, அயலானில் அக்கறை, உதவி தேவைப்பட்டோருக்கு உதவுதல் போன்ற நற்கிரியைகளில் ஈடுபடுவதை தவிர்த்து தன்னைப் பற்றியே சிந்தித்து அவனுக்காக மட்டுமே வாழுகிறான். சட்ட ஒழுங்கற்ற நிலை, அநீதி, செல்வத்திற்கும், ஆட்சிக்கும் பேராசை, இலஞ்சம், ஊழல், ஆகியன தினமும் எம் செவியில் கேட்கும் அன்றாட செயல்களாக மாறி விட்டன.

இவ்வாறு இன்றைய மனிதன் இறைவனைத் தேடி செல்வதைத் தவிர்த்து, இறைவன் இல்லாத உலகொன்றை கட்டியெழுப்ப முற்படுகின்றான். அதேவேளை அடிப்படைவாத குழுக்களின் செயற்பாடுகளும் மக்களின் விசுவாசத்துககு பாதகமாக அமைகின்றன. மக்கள் மேலும் நலிந்தவர்களாக ஆக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களது சிறிய விசுவாசத்தையும் இழக்கும் நிலை ஏற்படுகின்றது. இப்படியாக இன்றைய நவீன உலகை பாவம் ஆட்சிசெய்கின்றது. இப்படியாக இன்றைய நவீன உலகை பாவம் ஆட்சி செய்கின்றது. இவை அனைத்திலும் இறைவன் மனிதனின் அழிவை அல்ல, மாறாக மீட்பையே விரும்புகிறார். "தன் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்". *(யோவா 3:16)*

தினம் இயேசு "என் பின்னே வாருங்கள் மனிதர்களை பிடிப்பவர்களாக்குவேன்" என்று தன் சீடர்களுக்கு விடுத்த அழைப்பு அன்று போல் இன்றும் பொருத்தமாகும். ஆண்டவரின் அழைப்பை ஏற்று, அவரைப் பின்பற்றி, அவருக்கு சேவை செய்ய கடந்த காலங்களைவிட இன்றே சீடர்கள் அதிகம் தேவைப்படுகிறார்கள். விழுந்தோரை எழுப்பிவிட, நலிந்தோரை திடப்படுத்த, காயப்பட்டோரை குணப்படுத்த, அநாதைகளுக்கு ஆதரவளிக்க, வழி தவறி செல்வோரை நல்வழிக்கு கொண்டுவர சேவை மனப்பான்மையுடன் தங்களையே அர்ப்பணிக்க கூடியவர்களும், விரும்புபவர்களும் இன்றைய சமுதாயத்தின் தேவையாக இருக்கிறது. ஆகவே எப்பொழுதும் தம் மக்களின் நலன் கருதும் ஆண்டவரிடம் இன்று நாம் விசேடமாக மன்றாடுவோம். நலிந்தோரை திடப்படுத்தி இயேசு காட்டிய வழியில் செல்ல மேலும் அநேக குருக்களையும், துறவிகளையும் அழைக்குமாறு அறுவடையின் ஆண்டவரிடம் மன்றாடுவோம். இறைவனின் அழைப்பை ஏற்று தம்மை முழுமையாக அர்ப்பணிக்க பயிற்சி பெறுவோர்க்கு எம்மாலியன்ற உதவிகளைச் செய்வோம். அவ்வாறே இயேசுவின் இதயத்தை ஒத்த நல்ல மேய்படர்களுக்கு ஆண்டவரின் மந்தையை ஒப் படைப்பதற்கு முழு மூச்சுடன் செயல் படுவோமாக.

### கிறிஸ்துவின் அன்பு நெஞ்சங்களே!

இவ்வருடம் சித்திரை மாதம் 29ம் திகதி (பாஸ்க்கா காலம் 4ம் ஞாயிறு) உலக இறையழைத்தல் தினமாக கடைப்பிடிக்க திருச்சபை எமக்கு அழைப்பு விடுக்கின்றது. இதற்கமைவாக இம்முறை தேசிய ரீதியில் ஆயத்தப்படுத்தப்பட்ட வழிகாட்டுதலை உங்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம். இவ்வாண்டின் கருப்பொருளாக "ஆண்டவரே இதோ நான் இருக்கின்றேன் அடியேனை அனுப்பும்" எனும் சுலோகம் எமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக சுவரொட்டிகள், வழிபாட்டுக் குறிப்புக்கள், செபஅட்டைகள், மறைக்கல்வி பாடல்குறிப்பு என்பன பங்குத்தந்தை மூலம் அனுப்பி வைத்திருக்கின்றோம். இந்நாளை செப நாளாகவும், இறையழைத்தலை ஊக்குவிக்கின்ற நாளாகவும் கடைப்பிடிக்க உங்களது மேலான ஒத்துழைப்பை கேட்டு நிற்கின்றோம்.

*இயக்குநர்,*
*இறைஅழைத்தல்*
*பணிக்குழு.*

## முத்திப்பேறுபெற்ற சார்ள்ஸ் டி போகால்ட் என்பவரின் வாழ்க்கையை மாற்றிய தேவ அழைத்தலின் கதை

முத்திப்பேறுபெற்ற சார்ல்ஸ் டி போகால்ட் பிரஞ்சு தேசத்தில் ஆட்சியாளர் வழிமரபில் 1858 15ம் திகதி புரட்டாசி மாதம் "ஸ்டராஸ்பாக்" என்னும் செல்வந்த குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமையாக இருக்கும் போதே இவரது பெற் றோர்கள் பெரிய ஒரு செல்வ சொத்தை அவருடன் விட்டு விட்டு இறந்தனர். இவர் தனது பெற்றோரின் உடைமைகளை தாண்தோன்றித்தனமான களியாட்டத்திலும், மதுபோதையிலும் தனது சக நண்பர்களுடன் சேர்ந்து வீண் விரயம் செய்தார். பின்னர் இவர் இராணுவத்தில் இணைந்து பிரெஞ்சு வெளிவிவகார ஆளுநராக கடமையாற்றினார். பின்னர் இவர் சமூகத்தில் இருந்த மற்றும் சில நண்பர்களுடனும் ஏற்படுத்திய தகாத உறவின் காரணமாக தனது இராணுவ பதவியை ராஜினாமா செய்ய வேண்டியதாயிற்று. இவர் வட ஆபிரிக்காவில் வாழ்ந்த போதும் அம் மக்களின் வாழ்க்கை முறையில் ஈடுபாடு கொண்டிருந்த போதிலும் ஒரு யதார்த்த வாதியாகவே காணப்பட்டார். அவர் தனது நாடான பிரான்சிற்கு திரும்பிய போது துறவற வாழ்க்கையில் நாட்டம் கொண்டார். அத் துறவறத் தேடல் திருச்சபையின் மேல் மேலும் மிகுந்த பற்றுக் கொள்ளச் செய்தது. "கடவுளே! நீர் இருக்கின்றீர் எனில் எனக்கு உம்மை வெளிப்படுத்தும்" என்ற அழகிய செபத்தை உருவாக்கினார். கடைசியாக 1886ம் ஆண்டளவில் கிறிஸ்துவின் குரலை கேட்டு மனம் மாறிய இவர் பாவசங்கீர்த்தனம் செய்து தனது துறவறத்திற்கான அழைப்பை நோக்கி பயணித்தார். 1886ல் "புனித மிக்குச்" சென்ற இவர், அங்கே இயேசு பிறந்த இடமான நாசரேத்து மட்டில் அளவற்ற அன்பு கொண்டார். மேலும் புனித மரியாள், புனித யோசேப்பு மற்றும் இயேசு வாழ்ந்த இடமாகிய நாசரேத்திற்கு மிகுந்த வணக்கம் செலுத்தினார். முஸ்லீம் சமுதாயத்தில் இருந்த வேலைத்தளத்தில் தலைமையாளராக இருந்த இவர் இயேசுவின் வார்த்தைகளை கேட்டதன் பின் தனது தலைமைத்துவத்தை துறந்து தன்னையும் சக வேலைக்காரனாக மாற்றிக் கொண்டார். இவர் "ஏப்பிற்ஸ்" என்னும் வேலைத்தளத்தை விட்டு பின்னர் 1897 தொடக்கம் 1900 ஆண்டு வரை நாசரேத்தில் தோட்டக்காரனாக ஒரு துறவறமடத்தில் வேலை செய்தார். பின்னர் 1901ம் ஆண்டில் ஜுன் மாதம் 9ம் திகதி தனது குருத்துவத்தை பெற்று தான் முன்பு வாழ்ந்த வடஆபிரிக்க முஸ்லீம் சமூகத்தின் மத்தியில் துறவியாக வாழ்ந்த வந்தார். 15 வருடங்களாக "நாசரேத்தின் மறைவான வாழ்க்கையை" 'தாமன்ராசெற்' என்ற பகுதியில் வாழ்ந்தார். (தெற்கு சகாராவில் வாழ்ந்த மக்கள் மத்தியில்) அங்கு அவர் பகலில் பாலைவனத்தில் காணப்படும் கடும் வெயி லையும் இரவுவேளையில் கடும் குளிரையும் அனுபவித்தே வாழ்ந் தார். கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவதையே குறிக் கோளாகக் கொண்ட இவர் இரவுநேரம் முழுவதும் நற்கருணை ஆண்டவரை வணங்கி புகழ்வதிலும் பகல் நேரங்களில் அங்கு வாழ்ந்த மக்களின் "தொரேச்" (Touareg) மொழியில் புனித வேதாகமத்தை மாற்றி எழுதியும் வந்தார். இறுதியாக மார்கழி மாதம் 1ம் திகதி 1916ம் ஆண்டு "பிரச்சு பழங்குடிமரபினர்" என்னும் கிளர்ச்சிக் குழுவினால் கொல்லப்பட்டார்.


## நீங்கா நினைவுகளுடன்

1ம் ஆண்டு



எமது அன்புப் பெற்றோர் இறைவனின் பேரின்பத்தில் மகிழ்ந்திருக்க இந்நாளில் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

21ம் ஆண்டு



**றெஜீனா மேரி ஜோசப்**
(வளன்புரம் லீலா ரீச்சர்)
மலர்வு : 06-09-1933
உதிர்வு :06-05-2011

**வஸ்ரியன்பிள்ளை மேரி ஜோசப்**
(கரம்பன் சின்னத்துறை)
மலர்வு : 31-06-1931
உதிர்வு : 29-04-1991

முன்னாள் ஆசிரியை
யா/புனித திரேசா வித்தியாலயம் . இளவாலை
யா/ சென்ஜோன்பொஸ்கோ வித்தியாலயம் . யாழ்ப்பாணம்
யா/ துரைச்சாமி வித்தியாலயம் . புங்குடுதீவு
யா/புனித சூசையப்பர் வித்தியாலயம் . கொழும்புத்துறை

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 05-05-2012 காலை 7 மணிக்கு வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

ஒஸ்மன்
வளன்புரம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம். (0714212241)

(Advt-41/12)

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



## விண்ணக வாழ்வின் 4ம் ஆண்டு

மண்ணில் 07-04-1913
விண்ணில் 04-05-2008

"உம் அருள் நலமும் பேரன்பும் என்னை புடை சூழ்ந்து வரும். நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்"
தி.பா 23:6

உன்னதத்தில் அமைதியில்
மகிழ்பவளே
நாளும் உம் நினைவில்
வாழ்கிறோம்
நித்திய ஒளியில் - நாமும்
ஒரு நாள் சந்திப்போம்...
ஒன்றாய் மகிழ்வோம்.

கோவில்குடியிருப்பு
சாவகச்சேரி

**திருமதி ஆனாச்சி பொன்னுக்கோன்**



உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Add: 42/12


பொதுநிலையினா..... (1ம் பக்கத் தொடர்ச்சி)

எம்மக்களின் விடிவுக்காக தங்கள் குரல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். கோரிக்கைகள் அனைத்தையும் கவனமாக செவிமடுத்த ஆயர் அவர்கள் தன்னால் இயன்ற அளவு முன்வைக்கப்பட்ட கோரிகைகளை நடைமுறைப்படுத்த உழைப்பதாக உறுதி கூறினார்.

# பொது நிலையினர் வருடாந்த மாநாடு - 2012

யாழ். மறை மாவட்ட பொது நிலையினர் கழகத்தின் வருடாந்த மாநாடு எதிர் வரும் 29-04-2012 (ஞாயிறுதினம்) யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ். மறை மாவட்டத்தில் உள்ள ஏறக்குறைய 58 பங்குகளில் இருந்து பிரதிகளாக 300 பொதுநிலையினர் இம்மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்திற்கான புதிய யாப்பு ஒன்று வெளியிடப்படுவதுடன், எதிர்வரும் இரு ஆண்டுகளுக்கான புதிய செயற்குழுவும் தெரிவு செய்யப்படும் என கழகத்தின் செயலாளர் பாதுகாவலனுக்கு அறியத் தந்துள்ளார்.

# மறைக்கல்வி ஆண்டினை சிறப்பிக்க யாழ். மறைமாவட்ட சமூகத்தொடர்பு ஆணையம் ஒழுங்கு செய்யும் புனித நாட்டிற்கான திருப்பயணம்

ஏப்ரல் 23 ஆம் திகதி ஆரம்பித்த புனித நாட்டிற்கான இரண்டாவது திருப்பயணத்தில் இணையும் திருப்பயணிகள் இவர்கள்



# புதிய நற்செய்திப் பணிக்கு அன்னை தெரேசா மீது அன்பு தேவை – பேராயர் டி சூசா

இந்தியாவில் கிறிஸ்தவ மறைப்பணியாளர்கள் தங்களது பிறரன்புப் பணிகள், மிகவும் வசதி குறைந்த பகுதிகளிலுள்ள பள்ளிகள், மருத்துவமனைகள், தொழுநோயாளர் குடியிருப்புகள் ஆகியவை மூலம் மதமாற்றம் செய்கின்றார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு பலவகையான அடக்குமுறைகளால் துன்புறுகின்றனர் என்று பேராயர் Henry D'Souza இந்தியாவில் இறைப்பணி மற்றும் அது எதிர்நோக்கும் இன்னல்கள் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்ட கல்கத்தாவின் முன்னாள் பேராயராகிய டி சூசா, அருளாளர் அன்னை தெரேசாவின் எடுத்துக் காட்டான வாழ்வு பறறிய சிந்தனைகளையும் பகிர்ந்து கொண்டார்.

மதமாற்றக் குற்றச்சாட்டுகள் மற்றும் பல இன்னல்களுக்கு மத்தியிலும் மறைப்பணியைத் திறம்பட எடுத்துச் செய்வதற்கு இறையன்பும் பிறரன்பும் மிகவும் உதவுகின்றன என்றும் பேராயர் கூறினார்.

அன்னை தெரேசாவுடன் சுமார் 35 ஆண்டுகள் பணி செய்துள்ள பேராயர் டி சூசா, அன்னை தெரேசா கொணடிருந்த இறையன்பே அவரது மறைப்பணிக்கு உதவியாக இருந்தது என்று தெரிவித்தார்.

# "மகிழ்ச்சியான வாழ்வு" - நூல் ஒரு கண்ணோட்டம்

15.03.2012 அன்று வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெற்ற இப்புத்தக வெளியீட்டின்போது வடமாகாண ஆளுநரின் செயலாளர், கல்விச்செயலாளர், சமயத் தலைவர்கள், பிரதம அதிதிகளுடன் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள், யாழ் பல்கலைக் கழக பீடாதி பதிகள், பேராசிரியர்கள், விரவுரையாளர்கள், ஆசிரிய பயிற்சிக்கலாசாலை






விரிவுரையாளர்கள், அதிபர்கள், அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நூல் வெளியீட்டிற்கான ஆசியுரைகளை அனைத்து சமயத்தலைவர்களும் வழங்கினர்.

சமூகத்தில் விழுமியங்களைக் கட்டியெழுப்புவதில் சமயத்தலைவர்களின் பங்கு முக்கியமெனவும், பாடசாலைகளில் கற்கும் சூழல் மறைந்து வருகிறதெனவும், சமஆளுமை வளர்ச்சிக்கு இந்நூல் பெருமளவு பங்களிக்குமெனவும், விழுமியங்களை ஆழமாக்கி, விசாலிப்பதற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக்கூறியதுடன், அதற்குரிய வளங்களை கொடுத்துதவத் தயாராக இருப்பதாகவும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் திரு. டீ. இளங்கோவன் எடுத்துக் கூறினார்.

முக்கியமாக யாழ் கல்விச் சமூகம் இவ்வைபவத்தினைச் சிறப்பித்து அறிமுகவுரை, நயப்புரைகள் வழங்கி இந்நூலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர். நூலின் அறிமுகவுரையை பேராசிரியர் ஆ. சின்னத்தம்பி, ( யாழ். பல்கலைக் கழகம்) சிறப்பாக வழங்கினார். அவர் தனது உரையில் புத்தகத்தின் வடிவமைப்பையும், அடக்கப்பட்டுள்ள விடயங்களின், தொடர்புத் தன்மை பற்றியும் மிகவும் ஆழமாக எடுத்துரைத்தார். இத்தொடர்நூலின் ஒன்பது முக்கிய நோக்கங்களை விளக்கியதுடன், படைப்பாளிகளை உருவாக்குவதற்கும், தீர்மானங்களை எடுக்கும் ஆற்றலை வளர்க்கவும். பெற்றோர்-பிள்ளைகள் உறவை வளர்க்கவும், மாணவரின் மனப்பக்குவத்தை மேம்படுத்தவும், சமூகத்தில் ஒண்றிணைந்து வாழவும் இந்நூலில் சிறப்பான அம்சங்கள் தொகுக்கப்பட்டுள்ளனவெனக் கூறினார்.

நயப்புரையினை அருட்சகோதரி ஜீவந்தி, (அதிபர், புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) திருமதி டீ. மனோகரன், (ஆசிரியர், நாவலர் பாடசாலை, கோப்பாய்) திரு. லலீஸன், (விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்,) பேராசிரியர் தி. வேல்நம்பி, பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்) திருமதி யோ. சிவப்பிரகாசம் (ஓய்வு பெற்ற முகாமையாளர், யாழ். மக்கள் வங்கி) ஆகியோர் வழங்கினர்.

# தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சியில் (TCNL TV) தினமும் காலைத் திருப்பலி

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா தொலைக்காட்சியில் மே மாதம் முதலாம் திகதி முதல் நேயர்கள் காலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை திருப்பலி பூசையைக் காணுகின்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் பாரதியார் பல்கலைக்கழக ஊடக கலைமானி - முதுமானி பட்டங்கள்

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இந்திய கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைப்புப் பெற்று அதன் கல்வி நிலையமாக செயல்படவுள்ளது. இங்கு BSc (Visual Communication) PG Diploma (Communicative English) MA (Mass Media and Journalism) ஆகிய மூன்று கற்கை நெறிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பாடநெறி பரீட்சை சான்றிதழ் அனைத்தும் பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஒழுங்குமுறைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.

யூன் 2012இல் பதிவுகளை மேற்கொள்ளுவோர் மே 2013இல் பரீட்சைக்கு தோற்ற முடியும். அடிப்படைத் தகமைகள் கட்டணம் வகுப்பு நாட்கள் போன்ற விபரங்களை பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் தொலைபேசி இலக்கமான 021 222 6085 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சனி, ஞாயிறு தினங்களில் நேரடியாக வந்து அனுமதி பத்திரம் போன்ற விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கல்வி கற்போர் தொகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடன் தொடர்புகொண்டு பதிவு செய்யவும்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
இயக்குநர் : பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
இல 891 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 6085

**யாழ் நூலகத்திற்கு..**(1ம் பக்கத் தொடர்ச்சி)

புக தெற்கு மக்கள் காட்டும் அக்கறையைப் பாராட்டி நன்றியோடு அடிகளாரிடம் இருந்து நூல்களைப் பெற்று யாழ் நூலகரிடம் கையளித்தார். இப்புத்தக அன்பளிப்பு நிகழ்வை பாதுகாவலன் ஆசிரியர் அருட்பணி எஸ். ஏ. றொஷான் அடிகள் ஒழுங்கு செய்திருந்தார்.

# இறைவனின் செய்தியை மக்களிடம் எடுத்துச்செல்ல சமூக ஊடகம் எண்ணற்ற வாய்ப்புக்களைத் தருகின்றது

இணையதளமும், சமூக ஊடக (Social media) புதிய தொடர்பு முறைகளும் இறைவனின் செய்தியை மக்களிடம் எடுத்துச் செல்ல எண்ணற்ற வாய்ப்புக்களைத் தருகின்றன என்று புதிய தொடர்பு முறைகளில் வல்லுனரான Brent Dusing, கூறினார்.

முக நூல் எனப்படும் புதிய தொடர்பு முறை வழியாக 'மோசேயின் பயணம்' என்ற புதியதொரு கணனி விளையாட்டை கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அறிமுகப் படுத்திய கலிபோர்னியா மாநிலைத்தைச் சேர்ந்த Brent Dusing. இவர் அறிமுகப் படுத்திய 'மோசேயின் பயணம்' என்ற விளையாட்டைக் கடந்த ஒன்பது மாதங்களில் 217000 பேர் விரும்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இறைவார்த்தையை இன்னும் அதிகமாகவும், ஆழமாகவும் அறிந்து கொள்ள இந்த விளையாட்டு இளையோரைத் தூண்டி வருவதைக் காண முடிகிறது என்று Brent Dusing கூறினார்.

விவிலியத்தின் அடிப்படையில் மற்றுமொரு விளையாட்டைத் தங்கள் நிறுவனம் திட்டமிட்டு வருவதாகவும், விரைவில் இந்த விளையாட்டு அறிமுகப்படுத்தப்படும் என்றும் Brent Dusing கூறினார்.

# நற்செய்தியைப் பரப்புவதற்கு ஒவ்வொருவரும் அவரவர் வாழ்விலிருந்து ஆரம்பிக்க வேண்டும்

**கர்தினால்ஆச்வல்ட் கிரேசியஸ்**

நற்செய்தியைப் பரப்பும் பணியை ஒவ்வொருவரும் அவரவர் வாழ்விலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்று இந்திய ஆயர் பேரவையின் தலைவர் கர்தினால் ஆச்வல்ட கிரேசியஸ் கூறினார்.

ஏப்ரல் 17-18 ஆகிய இரு நாட்கள் பங்களூரில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசிய மும்பைப் பேராயர் கர்தினால் கிரேசியஸ், இந்தியாவின் கலாச்சாரம், அரசியல், பொதுவாழ்வு ஆகிய அனைத்து அம்சங்களும் நற்செய்தியின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அது அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் என்று கூறினார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.